

# உங்களோடு ஒரு நிமிடம்





சாமுவேல் பவுல் ஐயர்

# உங்களோடு ஒரு நிமிடம்

சாமுவேல் பவுல் ஐயர்

CLS

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை

*Published by*
THE CHRISTIAN LITERATURE SOCIETY
Post Box No. 501, Park Town, Madras - 3

**UNGAḶŌḌU ORU NEMIDAM**
By Rev. Samuel Paul

© CLS

*Reprinted, 1996*

Printed at THE C.L.S. PRESS, Madras—7. L 5904

# பதிப்புரை

சாமுவேல் பவுல் ஐயரின் 152 ஆம் பிறப்பாண்டு ஜூன் 15 ஆம் தேதி நிறைவுறுவதை ஒட்டி அவருடைய சில நூல்களை மீண்டும் வெளிக்கொணரும் திட்டத்தின்படி இந்நூல் வெளியிடப்படுகின்றது.

மூன்று நான்கு தலைமுறையினர் வாசித்துப் பயனடைந்து வந்திருக்கும் இந்நூல் உங்களுக்கும் நலம் பயப்பதாக அமைய ஆண்டவர் அருள்புரிவாராக.

**அருள்திரு. டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்**
பொதுச் செயலாளர்
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை

ஜூன் 11, 1996
சென்னை

# ராவ் சாஹிப் சாமுவேல் பவுல் ஐயரவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

கனம் சாமுவேல் பவுல் ஐயரவர்கள் திருநெல்வேலி மாவட்டம் தென்கரையைச் சேர்ந்த பாட்டக்கரை என்னும் கிராமத்தில் 1844ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் தேதி பிறந்தார். இக்கிராமம் மெஞ்ஞானபுரத்திற்கருகில் உள்ளது. நிலவளம், நீர்வளம் பொருந்தி, மாந்தோப்புகள் அடர்ந்த செழிப்பான ஒரு சிற்றூர். இவருடைய தந்தையார் கனம் தானியேல் பவுல் ஐயரவர்கள். சிறந்த பக்தன், வைராக்கிய பிரசங்கி. புகழ்பெற்ற மிஷனெரியாகிய கனம் ஜே. தோமாஸ் ஐயரவர்கள் இவருடைய பிரசங்கங்களைக் கேட்டு எழுப்புதலடைந்து கூறியதாவது: ''பவுல் தானியேல் ஐயர் செய்யும் பிரசங்கங்களைப்போலொத்த பிரசங்கங்கள் லண்டன் பட்டணத்துப் பொற்பங்களில் செய்யப்படுமாகில், ஆலயங்களில் இடம் காணாதேபோம். ஒருவேளை இந்தியாவில் எழும்பின குருக்களில் இவர்தான் மகோன்னத பிரசங்கியாயிருக்கலாம்.''

இச் சிறந்த் பக்தனின் பதினொரு பிள்ளைகளில் சாமுவேல் பவுல் ஐயர் ஆறாவது பிறந்த ஆண் மகன். இவருக்கு முந்தின ஐந்து பேரும் பெண்கள். சாமுவேல் பவுல் ஐயர் இளமையில் தம் தந்தையார் உபதேசியார் அலுவல் பார்த்த கிராமத்தில் மூலாதாரக் கல்வி கற்றுக்கொண்டார். வேத அறிவைப் பெருக்கி வந்தார். மெஞ்ஞானபுரம் கலாசாலையில் கனம் ஜே. தோமாஸ் மிஷனெரியின்கீழ் உயர்தரக் கல்வி கற்றார். பாளையங்கோட்டையில் கனம் சார்ஜென்ற் மிஷனெரியின்கீழ் வேத சாஸ்திரக் கல்வி பெற்றார். பின்னர் சென்னப்பட்டணத்தில் கனம் சத்தியநாதன் ஐயரவர்களின்கீழ் உபதேசியாராகச் சிறந்த பணியாற்றினார். திருநெல்வேலி அத்தியட்சாதீன குருவாகிய கனம் பரமானந்தம் சிமியோன் ஐயரவர்களின் குமாரத்தியை 1868ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 6ஆம் தேதி அன்பினகரம் என்னும் கிராமத்தில் மணம்புரிந்து மீண்டும் சென்னப்பட்டணத்திற்கே தேவ

ஊழியம் செய்யும்படி வந்தார். 1871இல் குருத்துவ ஊழியத்திற் கெனத் தெரிந்துகொள்ளப்பட்டு, அதற்குரிய பரீட்சைகளில் முதல்தரமாகச் சித்திபெற்று, 1874ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் தேதி மகா கனம் ஜெல் அத்தியட்சரவர்களால் திருச்சிராப்பள்ளி எஸ்.பி.ஜி. ஆலயத்தில் குருப்பட்டம் பெற்று, உதகமண்டலம் சி.எம்.எஸ். சபைக்குக் குருவாக நியமிக்கப் பட்டார். அதற்குப் பின்னுள்ள ஊழியத்தை மூன்று பாகங் களாகப் பிரிக்கலாம்: (1) மலை ஊழியம், (2) நகர ஊழியம், (3) நாட்டுப்புற ஊழியம்.

**உதகமண்டலம்:** *(1) மலை ஊழியம் (1874-1883).* உதக மண்டலத்துத் தமிழ்ச் சபையில் ஒன்பது வருடங்கள் அதிக ஊக்கத்தோடும் பிரயாசத்தோடும் உழைத்துக் கடைசியாக மர ணத்துக்கேதுவான வியாதிநிலையுண்டாகி அநேக நாள் ஆஸ்பத் திரியிலிருந்து சற்று சுகமானபின் நீலகிரி மலை அவருக்கு ஒத்துக் கொள்ளாதென்று வைத்தியர் அபிப்பிராயப்பட்டதால் அவ் விடத்தை விட்டு சென்னப்பட்டணத்துக்கு மாற்றப்பட்டார். நீலகிரியிலிருக்கையில், உவைநாடு சபையை (Wynaad Mission) ஸ்தாபித்துக் கவனித்துவந்தார். 1882ஆம் வருஷம் கள்ளிக்கோட் டையில் சிதறியிருந்த தமிழ்ச் சபை அங்கத்தினரை ஒன்றுசேர்த்து அச்சபையை ஸ்திரப்படுத்தினர். அங்ஙனமே குன்னூரிலும் சர்ச் மிஷன் சபையை ஸ்தாபித்தார். உதகமண்டலத்தில் ஐரோப்பியரு டைய வீடுகளில் வேலைசெய்யும் வேலைக்காரருக்குப் பிரசங்கிக் கும்படியாக வேலைக்காரர் மிஷன் (Servants' Mission) என்று ஓர் மிஷன் ஏற்படுத்தி, அதற்கு ஒரு உபதேசியாரை நியமித்து அவருடைய சம்பளம் முழுவதும் மிஷனில் பொறுக்காதபடிக்கு ஒவ்வொரு துரைமார் வீட்டிலும் மாதம் 1 ரூபாய் வீதம் வசூல்செய்து உபதேசியாருடைய சம்பளத்தில் பாதி அவ்வித மாய்க் கிடைக்கும்படி ஒழுங்குசெய்தார். இதர மதஸ்தருக்குக் கிறிஸ்து மார்க்கத்தைப் பிரசங்கிப்பதற்குப் பற்பல முறைகளைக் கையாடி வந்தார். ஹோபார்ட் பாடசாலையில் இரண்டு வாரத்துக் கொரு தடவை தமிழிலாவது இங்கிலீஷிலாவது இதர மதஸ்த ருக்கு விசேஷ பிரசங்கம் செய்து பிரசங்கம் முடித்தபின் கேட்கப்

பட்ட கேள்விகளுக்குச் சந்தோஷமாய் விடையளிப்பார். வாரந் தோறும் சந்தைக்கூட்டங்களில் புறமதஸ்தருக்கென்று பிரசங்கம் நடத்துவார். மாதத்துக் கொருமுறை பௌர்ணமி தின இரவில் சதுர்ப் பிரசங்கம் செய்வார். அடிக்கடி சிறைச்சாலைக்குச் சென்று அங்கிருக்கும் கைதிகளுக்குப் பிரசங்கம் செய்வார்.

*சென்னையில் குருத்துவ ஊழியம்: (2)* நகர ஊழியம் *(1883-1887)*. சென்னபட்டணம் டக்கர் கோவிலுக்கு 1883ஆம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதியில் குருவாக நியமிக்கப் பட்டு அதிக உண்மையோடும் ஊக்கத்தோடும் தேவ ஊழியத்தை நடப்பித்தார். இவர் நடத்திவந்த ஆராதனைகளும் பிரசங்கங்க ளும் அதிக பக்தி விநயமும் எழுப்புதலுமுள்ளவைகளாயிருந் தன. இவர் காலத்தில் தான் பாடகர்கள் நியமிக்கப்பட்டுக் கின்னர வாத்தியத்தோடு ஆராதனைகள் முதல் முதல் நடத்தப்பட் டன. இளைப்பாறும் நேரமெல்லாம் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு எழுப்புதலும் பிரயோஜனமுமாக நூல்களைத் திரளாக எழுதினார். இதனால் தமிழ்ச் சபையோரெல்லாம் ஐயருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

*சாட்சியாபுரம்: (3)* கிராம ஊழியம் *(1887-1900)*. இது வட திருநெல்வேலி சபையை விசாரணைசெய்த காலத்தைக் குறிக்கும். வட திருநெல்வேலிக்காகத் தன் ஜீவனைக்கொடுத்த கனம் ராக் லாண்டு ஐயருடைய கல்லறை இந்நாள்வரையும் கிறிஸ்துவின் சுவிசேஷத்து ஞாபகஸ்தம்பமாக விளங்கிநிற்கும் சிவகாசியென் னும் ஊருக்கருகிலுள்ள சாட்சியாபுரம் என்னும் கிராமத்தில் அவர் தம் கிராம ஊழியத்தை ஆரம்பித்தார். சாட்சியாபுரம், வாகைக்குளம் ஆகிய இரண்டு வட்டாரங்களுக்கும் தலைவராக நியமிக்கப்பட்டு மரணபரியந்தம் அங்கேயே தங்கி மிக ஆர்வத் துடன் திருப்பணியாற்றினார். தவச உற்சவத்தை ஏற்படுத்துவ தற்கு முதல் முதல் ஆலோசனை சொன்னவர் இவரே. இவருடைய ஏற்பாட்டின்படிதான் தவச உற்சவம் நம் நாட்டில் முதல் முத லாக 1891ஆம் வருடம் ஜூன் மாதம் சாட்சியாபுரத்தில் கொண் டாடப்பட்டது.

*இதர தொண்டு:* 1890ஆம் வருஷம் முதல் 'நற்போதகம்' என்னும் மாதாந்தர தமிழ் பத்திரிகைக்குப் பத்திராதிபராயிருந் தார். 1894ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி சென்னை அத்தியட்சரவர்கள் இவரை ஆனரெரி சாப்பிளனாக (Honorary Chaplain) நியமித்தார். திருநெல்வேலி சபைகளைக் கண்காணித்து வந்த கனம் மோர்லி (Bishop Morley) அத்தியட்சரவர்களுக்கும் இவர் ஆனரெரி சாப்பிளனாகவிருந்தார்.

*ராவ் சாஹிப் பட்டம்:* சபையின் வாழ்வை வெகுவாய்க் கருதியிருந்ததுமல்லாமல் இராஜாங்க விஷயமாகவும், பொது ஜன நன்மைக்காகவும் பலவாறாகத் தம்மால் கூடியமட்டும் உழைத்துவந்தார். சிரிவிலிப்புத்தூர் தாலூகா போர்டு மெம்பராக வும், திருநெல்வேலி ஜில்லா போர்டு மெம்பராகவும் நியமகம் பெற்று அச் சங்கங்களில் நல்ல ஆலோசனை கொடுத்துவந்தார். பிரஜைகளின் நன்மைக்கென்று இவர் எழுதிய அபரிமிதமான புத்தகங்களை நன்கு மதித்து இந்தியாவின் கவர்னர்-ஜெனரலவர்கள் 1898ஆம் வருஷம் இவருக்கு ''ராவ் சாஹிப்'' (Rao Saheb) என்னும் பட்டம் கொடுத்துக் கனப்படுத்தினார்கள். இந்தியாவில் இந்தக் கவுரவத்தைப் பெற்றுக்கொண்ட 'முதலா வது சுதேச குரு இவரே.

இவர் மரிப்பதற்கு முந்தின வருடமாகிய 1899ஆம் வருஷம் மே, ஜூன் மாதங்களில் சிவகாசியில் பெருத்த கலகங்களும் கொள்ளைகளும் உண்டாகி, அனைவரும் கலங்கி நிற்கையில், கலகத்துக்குத் தளகர்த்தனாயிருந்தவனோடு இவர் சமாதான உடன்படிக்கை செய்து சாட்சியாபுரத்தையும் அதிலிருந்த கிறிஸ் தவர்களையும் தற்காத்தார்.

*இறுதிக் காலம்:* தமிழ்க் கிறிஸ்தவச் சபையின் உள்ளான ஆவியின் வளர்ச்சியைக் கருதிக் கிறிஸ்துவைப்போல் ஜீவித்தல் (Imago Christi) என்னும் ஓர் அருமையான புத்தகத்தை எழுத எண்ணங்கொண்டு ஆறு மாத காலமாய் அதற்கு வேண்டிய ஆதாரங்களைத் தேடி, ஆழ்ந்த யோசனையுடன் அதை எழுதிக்

கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென்று 1900 வருஷம் மார்ச்சு மாதம் 4ஆம் தேதி ஞாயிறு காலே ஜுரம் ஆரம்பித்து, கபால வியாதியும் அத்துடன் இருமலும் கலந்து, வைத்தியர்களின் பிரயாசத்துக்கு வியாதி அடங்காமல், மார்ச்சு மாதம் 11ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் ஒரு மணிக்குச் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் தம் பரம இளைப்பாறுதலுக்குட் பிரவேசித்தார். வியாதி ஆரம்பிக்கிற கடைசி நேரம் வரை தம் வேலையில் மிக ஊக்கமுள்ளவராயிருந்தார். வியாதிப்படுவதற்கு முந்தின தினமாகிய சனிக்கிழமை இரவு சுமார் 12 மணிக்குத் தம் சபையைச் சேர்ந்த சில வியாதியஸ்தரைச் சந்தித்து, அவர்களுக்கு உதவிபுரிந்து, அவர்களோடு ஜெபம் செய்தார். இதுவே அவருடைய குருத்தொழிலின் கடைசி ஊழியம்.

**மரணப்படுக்கை:** அவர் மரிப்பதற்கு முன் செய்த கடைசி ஜெபத்தில் ஆண்டவரே சிறு வயது முதல் என்னை உமது ஊழியத்தில் அமர்த்தி இதுவரையில் என்னில் உம்முடைய நாமம் மகிமைப்படக் கருணைகூர்ந்தீர். இப்போதும் என்னை உமது சமுகத்துக்கழைத்துக்கொள்ளச் சித்தங்கொண்டீர். ஆனால் இன்னும் சில காலமாத்திரம் ஜீவித்திருப்பேனானால் நான் இயற்றத்துவக்கின இரண்டு புத்தகங்களை (Imago Christi and Imitation of Christ) முடித்துத் தேவரீருடைய சந்நிதி சேர சந்தோஷத்தோடு எதிர்நோக்கியிருப்பேன். ஆயினும் என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது என்றார். கடைசியாக அருகிலிருந்த தமது உடனூழியனாகிய அருளப்பன் உபாத்தியாயரைப் பார்த்துத் தம் வீட்டைச் சுட்டிக்காட்டி, சகோதரனே, இந்தக் கூரையைப் பார்த்தீரா? என்ன கேவலமாயிருக்கிறது! இது என் வீடல்ல. நான் போகும் மாளிகைக்கு இது ஈடாகாது. இதைப் பார்க்கிலும் மிக அலங்காரமான மாளிகை எனக்கு ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்துக்கு நான் போக வேண்டும்; கோவில் மணியடிக்கிறது; கோவிலுக்கு நான் போகிறேன் என்று சொன்னார். இதுதான் அவருடைய கடைசி வார்த்தை. தம் அருமை மனைவி அவரிடம் வந்து தனக்கு என்ன

சொல்லப் போகிறீர்கள் என்று கேட்க, தன் கையை உயர்த்திக் காட்டிக் கண்ணை மூடினார். அதன்பின் அவர் மனதிலே ஜெபித்து அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும் வாய்க்குள் சொல்லி முடித்தார். உடனே அவருடைய ஆவி அகமகிழ்வுடன் ஆகாயப் பிரவேசமாயிற்று. மரித்தபின் அவருடைய முகத்தில் காணப்பட்ட முகமலர்ச்சியும், சந்தோஷமும், அழகும் அனைவரையும் பிரமிக்கச் செய்தன. இவருடைய சரீரம் சாட்சியாபுரம் கோவிலைச் சேர்ந்த கல்லறைத் தோட்டத்தில் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறது. பாளையங் கோட்டை அத்தியட்சாலயத்தில் ஒரு ஞாபகார்த்த கல்லும் பதிக்கப்பட்டிருக்கிறது.

அவர் எழுதிய 16 சிறந்த நூல்களில் ''ஆத்தும நேசரின் அங்க மகத்துவ''மும், மொழிபெயர்த்த 26 நூல்களில் ''மோட்சப் பிரயாணம்'' என்னும் புத்தகமும் இன்றுவரை மிக அருமையாக மதிக்கப்பட்டு வருகின்றன. பவுல் ஐயர் மரித்தும் இன்னும் பேசுகிறார் என்று உண்மையாகவே சொல்லலாம்.

# 1. உன் ஆத்துமா சுகமா?

எனக்கு அநேக சிநேகிதர் இருக்கிறார்கள். அவர்களை அடிக்கடி சந்திக்கிறேன். என்னைக் கண்டவுடனே ஐயா சுகமா, தம்பி சுகமா என்று தப்பாமல் கேட்கிறார்கள். யாராவது அப்படிக் கேளாவிட்டால் அவர்கள்பேரில் கோபப்படுகிறேன். அவர்கள் என் சரீர சுகத்தையறிய இப்படிக் கேட்கிறார்கள். ஆனால் என் ஆத்தும சுகத்தை விரும்பி உன் ஆத்துமா சுகமா என்று கேட்ட ஒரே ஒரு சிநேகிதன் மாத்திரமுண்டு. அவரை வாழ்த்துகிறேன். அவர் ஆத்துமா சுகமாய்த் தங்குவதாக. அவர் கேட்டது நல்ல கேள்வி. அவர் கேட்டவுடனே அவர்பேரில் வெறுப்படைந்தேன். இப்போது உணர்ந்து அவரை வாழ்த்துகிறேன்.

''உன் ஆத்துமா சுகமா?'' **இயேசு** அடிக்கடி இப்படிக் கேட்கிறது போல் இருக்கிறது. அவர் ஏன் அப்படிக் கேட்கிறார்? வைத்திய னாச்சுதே கேட்கவேண்டாமா? தமது இரத்தத்தைத் தந்தவரல்லவா? கீலேயாத்தின் பிசின்தைலம் பூசின இரண வைத்தியனல்லவா? மருந்து பலித்ததாவென்று அறியவேண்டாமா?

''உன் ஆத்துமா சுகமா?'' என்று என் **சரீரம்** என் ஆத்துமாவைக் கேட்கிறது. ஏன் அப்படிக் கேட்கிறது? ஆத்துமா சுகமில்லாவிட் டால் சரீரமும்கூட நரகத்தில் அவதிப்பட வேண்டியது வருமே. அது சுகமாயிருந்தால் மோட்சத்தில் இதுவும் வாழுமே. அதற்காக ஆசைப்பட்டுக் கேட்கிறதாக்கும்.

''உன் ஆத்துமா சுகமா?'' என்று என் **மனச்சாட்சி** கேட்கிறான். இவன் கேட்கிறது பரியாசம். 'பாவம் செய்யாதே, செய்தால் ஆத்துமசுகம் கெடுமென்று சொன்னேனே. அதைக் கேளாமல் செய் தாயே. இப்போ உன் ஆத்துமா சுகமா?' என்று கேலி பண்ணுகிறது போல் இருக்கிறது. வார்த்தை கேளாதமட்டுக்கு வசை சொன்னால் ரோசம், அதேன்?

## 2. நீ குணப்பட்டவனா?

இந்தக் கேள்வியை ஒருவனிடத்தில் கேட்டேன். 'அடா இவன் என்ன பைத்தியக்காரன். இதென்ன கேள்வி' என்றான். 'நான் பைத்தியக்காரனா? என் கேள்வி பித்தம் கொண்ட கேள்வியா? உன் தலை நோகிறதும், நோகாததும் தெரியாதா? நீ பசியாயிருக்கிறதும் பசியில்லாமலிருக்கிறதும் உனக்குத் தெரியாதா? நீ கறுப்பனா சிவப்பனா தெரியாதா? நீ நொண்டுகிறதும் ஓடுகிறதும் தெரியாதா? நீ வைத்தியனைக் கூப்பிட்டதும் கூப்பிடாததும் உனக்குத் தெரியாதா?' என்றேன். 'இது தெரியாதா, பச்சைக் குழந்தைக்குக்கூடத் தெரியும்' என்றான். 'இதெல்லாம் தெரியுமானால் அதேன் தெரியாது?' என்று கேட்டேன்.

குணப்படுகிறது என்றால் அதென்ன? உன் பாவ வழிகளிலிருந்து மனந்திரும்பி, நன்மை செய்யப் பிரயாசப்படுகிறாயா? என்பதுதான்.

உன்னைக்கொண்டு உன்னைப்பார், உன்னைப் பரிசோதி, கண்டுபிடிப்பாய். குணப்படவில்லையென்று கண்டால் பரிசுத்த ஆவிக்காக முழங்கால்படியிட்டு வேண்டிக்கொள், நாளைக்காகட்டும் என்று விட்டு விடாதே. நாளையத்தினம் என் நாளுமல்ல உன் நாளுமல்ல. தேவனுடைய நாள். நீ குணப்பட்டவனானால் சந்தோஷப்படு. நல்ல காரியம் பண்ணினாய். உன் காரியம் யோகம்தான். உனக்குப் பாவ மன்னிப்பு உண்டு. கிறிஸ்துவின் நீதியுள்ள தேவ தயவு உண்டு. மோட்சம் உண்டு. உன்னை அசைக்க உன்னாலும் கூடாது, என்னாலும் கூடாது, பிசாசாலும் கூடாது. அவன் தூதராலும் கூடாது, தப்பிக்கொண்டாய்.

## 3. நீ என்றைக்குப் பிறந்தாய்?

என்ன? இந்தக் கேள்வியைக் கேட்டவுடனே வருஷம் மாதம் தேதியைச் சொல்லுகிறாயே. அது எனக்கு என்னத்துக்கு? அது

வேண்டாம், அதைச் சொல்லாதே. நீ என்றைக்கு மறுபடியும் பிறந்தாய்? அதற்கு உத்தரவு சொல். அதைத்தான் நான் அறிய விரும்புகிறேன். 'அது தெரியாது, அதை நான் யோசிக்கவில்லை' என்று மெதுவாய்ச் சொல்லுகிறாயே. ஐயோ! இன்னும் பிறக்க வில்லையாக்கும், நீ இவ்வுலகத்தில் பிறந்தது 1840ஆம் வருஷம் ஆவணி மாசம் 3ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10 மணி என்று உன் தகப்பனார் எழுதிவைத்திருக்கிறார். நீ மறுபடியும் பிறந்த வருஷம், பிறந்த மாசம், பிறந்த தேதி, பிறந்த நாள், பிறந்த மணி, பிறந்த நிமிஷம், உனக்குத் தெரியவேண்டும் என்று நினைக்கிறேன். பெரிடின் என்ற ஒருவர் 'நான் பாவத்திலே பிறந்தது 1714, நான் பராபரனிற் பிறந்தது 1730' என்று எழுதிவைத்தார். வேறொருவர் 'எனக்கு வயது 80, நான் பிறந்து நாலு வருஷமாயிற்று' என்று எழுதிவைத்தார்.

நீ மறுபடியும் பிறந்தகாலம் உனக்குத் தெரியவில்லை என்றால் உன்னைப் பெற்ற பரிசுத்த ஆவியைக்கேள். அவர் எழுதிவைத் திருப்பார்.

நீ மறுபடியும் இன்னும் பிறக்கவில்லையென்றால் உனக்காகத் துக்கப்படுகிறேன். பரிசுத்த ஆவியை வேண்டிக்கொள். வேறே உபாயம் எனக்குத் தெரியாது.

## 4. உன் பேரென்ன?

கிறிஸ்து சபையில் சேருகிற ஒவ்வொருவனும் ஞானஸ்நானம் பெறுகையில் ஒரு பேரைத் தரித்துக்கொள்ளுகிறானே, உன் பேரென்ன?

என் பேர் சாமுவேல் அல்லது பவுல், யோசுவா அல்லது தானியேல், யோசேப்பு என்று சொல்லுகிறாயோ? நல்லது, அந்த மகாத்மாக்களுடைய குணங்களுண்டா பார். என் பேர் ஏசுதாசன்

அல்லது ஏசுவடியான் என்கிறாயோ? நல்ல பேர். உன் பேரின்படி நீ இயேசுவின் தாசனா? இயேசுவின் அடியானா? என் பேர் அன்னாள் அல்லது மரியாள் என்கிறாயோ? அன்னாளுக்குள்ளிருந்த தேவபயம் இருக்கிறதா? மரியாளைப்போல'நல்ல பங்கைத் தெரிந்திருக்கிறாயா?

என் ஊரில் திரவியமுத்து என்று பேருடைய ஒருவன் உண்டு, அவன்தான் எல்லாரிலும் பிச்சைக்காரன். வீரசூரப் பெருமாள் என்று ஒருவன் உண்டு. அவனுக்கு ஒரு துரும்பைக் குனிந்தெடுக்கக்கூட சக்தியில்லை.

இப்படி பேர் வேறு, குணம் வேறாக இருந்தால் என்ன பிரயோசனம்?

பேர் மரியாளும் குணம் மார்த்தாளுமாயிருந்தென்ன பிரயோசனம்?

உன் பேர் கிறிஸ்தவன் அல்லவா? அந்தப் பேர் உனக்குத் தகுதியா சொல்லு?

## 5. உன் தேசம் எது?

அரசர் வசித்த தஞ்சைமா நகர் என்கிறாயோ? அல்லது மதுராபுரி என்கிறாயோ? நீ எந்தக் கீர்த்திபெற்ற தேசத்தானாயிருந்தாலும் எனக்கென்ன? உன் தேசம் எது?

நீ மிதித்துக்கொண்டிருக்கிற இந்த பூமியா? அல்லது வானமா? இதுதான் என் கேள்வி.

உனக்கே நீ எந்த தேசம் என்று தெரியுதில்லை போலிருக்கிறது. உன் உடுப்பைப்பார் கிறிஸ்துவின் நீதியென்னும் வஸ்திரம் உண்டா? உன் வாயைப்பார் மற்றவர்களை எழுப்புகிறதற்கேற்ற நல்ல வார்த்

தைகளுண்டா? உன் நடக்கையைப்பார் சன்மார்க்கமும் தேவபக்தியு முண்டா? நீ கடுதாசி எழுதின கணக்கைப்பார். மோட்சத்திலிருக்கிற இயேசுகிறிஸ்து மேல்விலாசம் பார்த்து, பிதாவாகிய தேவனுக்குக் கடுதாசி போட்டாயா? உன் பொக்கிஷம் எங்கே? மோட்சத்திலிருக் கிறதா? உன் பிராது தேவனுடைய கச்சேரியில் தாக்கலாகியிருக்கி றதா? இவைகளுக்கு இல்லை இல்லையென்று உத்தரவு சொன்னால் உன் தேசம் இந்த பூமிதான். ஆனால் என் தேசம் இதல்ல, என்னுடைய இருப்பிடம் பரமண்டலம். அங்கேயிருந்து கர்த்தரா கிய இயேசுவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

## 6. உன் உடுப்பைக் காட்டு

'இதற்குப் பேரென்ன? எங்கே நெய்தது? யார் கடையில் வாங்கினாய்? இதென்ன? பட்டா, சணலா, ரெட்டா*, நூலா, இதென்ன? புதுமாதிரியாயிருக்கிறதே, மனதை மயக்குகிறதே, கண் ணைப் பகட்டுகிறதே' என்று பரியாசத்துக்குச் சொன்னேன்.

அப்படியா நன்றாயிருக்கிறதா? இந்த உடுப்புப் போட்டால் நான் அழகாயிருக்கிறேனா? இது வாங்கப்பட்ட பாடு கடும்பாடு. கொடுத்த பணத்துக்குக் கணக்கில்லை' என்று ஒருவன் மறுமொழி சொன்னான்.

இதுதான் **சுயநீதி** என்னும் வஸ்திரம். என் கண்ணுக்கு அது அத்தியிலையால் செய்யப்பட்ட ஒரு துணிபோல் தெரிந்தது. அவன் கண்ணுக்கோ அது நன்றாயிருக்கிறது. அதையே உடுக்கிறான், அதினாலே மூடுகிறான், அதைத்தான் எல்லாருக்கும் காட்டுகிறான். அவன் சற்று உணர்வுள்ளவன். அவனைப் பார்த்து, 'உன் கண்ணுக்கு நன்றாயிருக்கிறது, எனக்கேன் அசங்கியமாயிருக்கிறது, எனக்கு அது

* முரட்டுத் துணி.

கந்தையான வஸ்திரம்போல்தான் தெரிகிறது, அதேன்?' என்றேன். 'முன் நன்றாயிருக்கிறதென்று சொன்னாயே' என்றான். 'அது உள்ள படியல்ல, பரிகாசச்சொல். இது நல்ல உடுப்பல்ல. உன் நிருவாணம் இந்த உடுப்பால் மூடப்படவில்லை. நீ வேறே கடைக்காரனிடத்தில் நான் எழுதிக்கொடுக்கிற பேரையுடைய உடுப்பை வாங்கு. அதற்குப் பணம் கொண்டு போகாதே. அந்த முதலாளியிடத்தில் போய் முழங்கால்படியிட்டுக் கேள், தருவார். அந்த முதலாளி பேர் என்ன? இயேசு. இயேசுவே நீர் நெய்த வெள்ளை அங்கிதாரும் என்று உடனே போய்க் கேள்' என்று கூறினேன்.

## 7. உன் பத்திரத்தைக் காட்டு

நான் ஒருநாள் என் சிநேகிதன் வீட்டுக்குப் போகிறபோது அவர் தமது பத்திரங்களடங்கிய ஓலைப்பெட்டியைத் திறந்து, பழைய முறிகள்*, தஸ்தாவேசுகள், ரசீதுகள் எல்லாவற்றையும் பார்வையிட்டார். அவரிடத்தில் உம்முடைய பத்திரத்தைக்காட்டும் என்றேன், திருகத் திருக விழித்தார்.

'சிநேகிதனே, நான் கேட்கிறது குற்றமா? நாம் குடியிருக்கிற வீட்டுக்கும், நமது வயலுக்கும், தோட்டத்துக்கும் பத்திரம் அவசிய மானால் நம்மைப்பற்றியே ஒரு பத்திரம் இருக்கவேண்டாமா? தன்னைப்பற்றி ஒரு பத்திரம் வைத்துக்கொள்ளாதவன் நல்ல கிறிஸ்தவனல்ல' என்றேன்.

உன்னைப்பற்றி உனக்கிருக்கவேண்டிய பத்திரத்தின் மாதிரி நகலைத் தருகிறேன் பார்:

சத்தியநகரத்தில் குடியிருக்கிற சாந்தப்பன் மகன் ஒளிமுத்து என்பவன் பரமண்டலத்தில் சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய

* துண்டுக் கடிதங்கள்.

தேவனுடைய வலது பக்கத்திலிருக்கிற இம்மானுவேல் என்று மறுநாம முடைய இயேசுகிறிஸ்துவுக்கு எழுதிக்கொடுத்த மாறாத உடன் படிக்கை யாதெனில், 1872ஆம் வருஷம், நவம்பர் மாசம் 20ஆம் தேதி புதன்கிழமை சாயந்தரம் 6 மணியாகிய இந்நிமிஷ முதல், இந்த மாம்சத்தோடிருக்கும் நாள்பரியந்தம் என் கை, கால், காது, வாய், வயிறு முதலியவைகளுள்ள என் சரீரத்தையும் என் விலை மதிக்கப்படாத ஆத்துமாவையும் உமக்கே படைக்கிறேன். என் முழு இருதயத்தாலும் உம்மையே நேசிப்பேன். உம்மையே புகழுவேன். உம்மையே மகிமைப்படுத்துவேன். மரணபரியந்தம் உமது கொடி யின் கீழ் நின்று போர் செய்வேன். என் பிராணனையும் அருமை யென்று எண்ணேன் என்பதாய் உறுதியாய் ஒத்துக்கொள்ளுகிறேன்.

இப்படிக்குச் சம்மதித்து
இந்த உறுதிமொழி உடன்படிக்கை எழுதிவைத்தேன்.
சத்தியநகரம் சாந்தப்பன் மகன் ஒளிமுத்து,
இந்த உடன்படிக்கை செய்ததை அறிவோம்.

| | | |
|---|---|---|
| வானம் | காபிரியேல் | பிதா |
| சூரியன் | மிகாவேல் | |
| சந்திரன் | ரபாயேல் | குமாரன் |
| பூமி | கேரூபின் | |
| மலை | சேராபின் | பரிசுத்த |
| வீடு | மற்ற தூதர் | ஆவி |

## 8. உம்முடைய தலையில் என்ன வியாதி?

'ஐயா! உம்முடைய தலையில் என்ன வியாதி? தலை நோவா? பீனிசமா?* என்ன விசேஷம்?'

'இல்லை அப்பா, எனக்குத் தலைநோவுமில்லை, பீனிசமு மில்லை சுகமாயிருக்கிறேன்.'

---

* மூக்கை வருத்தும் நோய்.

இல்லை, தலையில் ஏதோ ஒரு வியாதியிருக்கிறது. அடிக்கடி தலையைத் தலையை ஆட்டுகிறீர். ஏறத்தாழப் பார்க்கிறீர். உமது முகம் வேறுபட்டிருக்கிறது. வார்த்தை வித்தியாசப்படுகிறது. இது ஏதோ ஒரு வியாதியைப் பற்றினது. கைபிடித்துப் பார்க்கட்டும். இதோ கையைப் பிடித்துத்தான் பாருமேன்.

'ஆ, உமது ஆத்துமாவின் கைநாடியைப் பார்க்கையில் உமக்குப் **பெருமை**யென்னும் வியாதி மேலிட்டிருக்கிறதாய்த் தெரிகிறது. இதற்கு நீர் சீக்கிரம் அவிழ்தம் சாப்பிடாவிட்டால் மோசம் வரும். தேவதூதரில் சிலருக்கு ஒரு காலத்தில் இந்த நோயுண்டாகிக் கெட்டார்கள் (யூதா 6 வச.). நேபுகாத்நேச்சார் என்னும் ஒரு அரசனுக்கு இந்த வியாதியுண்டாகி, மிருகமாய்ப்போனான் (தானி. 4:29-33). மோவாபியரும் பெருமையால் கெட்டார்கள் (ஏசா. 16:6). பாபிலோனும் அந்த வியாதியாலேயே கெட்டது (எரே. 50:20). கல்தேயாவும் இந்த வியாதியாலேயே கெட்டது (ஆப. 2:5). இவர்கள் எல்லாரையும் பிடித்த வியாதியே உம்மையும் பிடித்திருக்கிறது. பின்னை உம்முடைய முடிவு என்னமாயிருக்கும் என்பதை நீரே பாரும்.' 'விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை' (நீதி. 16:18).

'நான் உம்மைப் பெருமைக்காரனென்று கண்டுபிடித்து சொன்னதற்காகக் கோபங்கொள்ளாதேயும். நான் உமது தோழன் அல்லவா? ஆகையால் தான் துணிந்து சொன்னேன். உம்முடை.ய தலையிலிருக்கிற அந்தச் சபிக்கப்பட்ட வியாதிக்குக் கைகண்ட ஒரு மருந்திருக்கிறது. அதை நீர் ஒரு மண்டலம் சாப்பிட்டால் அந்த வியாதி இருந்த இடம் தெரியாமல் பறந்துபோம்.' 'அந்த மருந்தென்ன ஐயா?'

'அந்த மருந்துக்குக் கர்த்தராயிருக்கிற **இயேசுகிறிஸ்துவின் தாழ்மை**யென்று பேர். அது புதிய ஏற்பாடு என்னும் கடையிலிருக்கிறது. அதை வாங்கிப் பரிசுத்த ஆவி என்னும் வைத்தியருடைய உத்தரவுப்படி கையாடும். உடனே வியாதி வெயிலைக் கண்ட பனி போல் பறக்கிறது பாரும்' 'நல்லது, நான் அப்படியே செய்து

மறுபடியும் உம்மைப் பார்க்கையில் அந்த வியாதியிலிருந்து விடுதலையானவனாய் வரும்படி விரும்புகிறேன்.'

## 9. நீ ஒரு பச்சோந்தி

இப்படி ஒரு பேர்க் கிறிஸ்தவனைப் பார்த்துச் சொன்னேன். உடனே அவனுக்குண்டான கோபத்தை என்னவென்று சொல்ல! தடியை எடுத்து அடிக்க வந்தான். மறுபடியும் நான் துணிந்து, இல்லை நீ பச்சோந்தி என்று சொன்னேன். உடனே தடியாலே என்னை ஒரு அடியும் அடித்துப்போட்டு, 'எனக்குக் கால் இல் லையா, கை இல்லையா, வாய் இல்லையா, புத்தி இல்லையா, நான் பேசவில்லையா, நடக்கவில்லையா, என்ன அப்படிச் சொல்லு கிறாய்' என்று அட்டகாசம் பண்ணினான்.

மறுபடியும் நான் அவனைப் பார்த்து 'நீ பச்சோந்தி' என்று சொன்னேன். அவன் நான் சொல்லுகிற கருத்தென்னவென்று சற்று யோசித்துக்கொண்டு நின்றான். இதுவே நல்ல சமயமென்று நான் கண்டு அவனைப் பார்த்து 'நீ பச்சோந்தியென்று நான் சொன்னது பொய்யா? பச்சோந்தி பல நிறத்தைக் காட்டுகிறதுபோல், நீயும் உன் மார்க்க விஷயத்தில் பல நிறங்காட்டும் பச்சோந்தியாயிருக்கிறாய் என்பதே என் கருத்து, உண்டா இல்லையா?'

'பச்சோந்தியை நிழலில் போட்டால் ஒரு நிறம், வெயிலில் போட்டால் வேறு நிறம். அதுபோல் நீ துன்பமாகிய வெயிலில் இருக்கிறபோது ஒரு நிறம், இன்பமாகிய நிழலில் இருக்கையில் வேறு நிறம். பின்னை உன்னை பச்சோந்தியென்று சொல்லக் கூடாதா? பச்சோந்தி ஒரே நாளில் பல நிறமாகிறது. நீயும் காலையில் நல்லகுணம், மத்தியானம் தீயகுணம், இரவில் கடினகுணம் காட்டு கிறாய், பின்னை உன்னைப் பச்சோந்தி என்று சொல்லக்கூடாதோ?'

'பச்சோந்தி ஏழு வெவ்வேறு இலையுள்ள மரங்களில் தாவி னால் அந்தந்த மரத்துக்கேற்ற நிறம் கொடுக்கிறது. அதுபோல நீயும்

ஞாயிறில் ஞானிபோலும், திங்களில் தேவன்போலும், செவ்வாயில் செவிடன்போலும், புதனில் பூனைபோலும், வியாழனில் விரத்தன் போலும், வெள்ளியில் கள்ளன்போலும், சனியில் சாத்தான்போலும், மறுபடியும் ஞாயிறில் ஞானிபோலும் மாறுகிறாய். பின்னை நான் உன்னைப் பச்சோந்தியென்று சொல்வது தப்போ?'

'இப்படி நீ ஏன் மாறுகிறாய்? உன் சத்தம் யாக்கோபின் சத்தமும் கைகள் ஏசாவின் கைகளுமாயிருப்பானேன்? இனி இந்த வேஷம் வேண்டாம். எல்லாவற்றையும் விட்டுப்போட்டு ஒரே நிறமுடையவனாய் உன்னைக் காட்டு!' என்றேன். உடனே முன் என்னைக் கோபித்து அடித்ததற்காக மன்னிப்புக்கேட்டு, நன்றி செலுத்தித் திரும்பினான்.

## 10. நீ நசரேயனல்லவா?

நசரேயனென்றால் யார்? ஒரு விசேஷித்த பிரார்த்தனை செய்து அந்தப் பிரார்த்தனையின்படி சிலகாலமாவது ஆயுசு காலபரியந்தமாவது தன்னைக் கர்த்தருக்கென்று பிரித்து ஒப்புக்கொடுத்த எந்த ஆணும் எந்தப் பெண்ணும் நசரேயனென்று அழைக்கப்பட்டனர். நீயும் ஒரு நசரேயனல்லவா? நீ பிசாசு, அதின் கிரியைகள், லோகம், அதின் ஆடம்பரம், மாம்சம், அதின் இச்சை இவைகளை வெறுப்பேன் என்றும், கிறிஸ்துமார்க்கப் பிரமாணங்களை விசுவாசிப்பேனென்றும், தேவனுடைய பரிசுத்த சித்தத்தையும் கற்பனைகளையுங் கைக்கொண்டு என் வாழ்நாளெல்லாம் அவைகளின்படி நடப்பேனென்றும், நீ அறிய, உன் குரு அறிய, உன் சபையறிய, உன் இனமறிய, உன் தேவனறிய பிரார்த்தனை பண்ணினாயல்லவா? ஆகையால் நீ முதல்தரமான நசரேயன்.

உன் பொருத்தனை எல்லாவற்றையும் மீறிப்போட்டு ஒரு பொருத்தனையும் செய்யாதவனைப்போல உன் இஷ்டப்படி நடக்கிறாயே. அதேன்? சொல்லு. நீ ஏன் பொருத்தனை பண்ணினாய்?

விளையாட்டுக்கா? தேவன் உன்னோடு விளையாட சிறு பைய னல்லவே. கேலிக்கா? தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட் டார். உன் பொருத்தனையைப்பற்றி ஏனோ தானோ வென்றிராதே. எச்சரிக்கையாயிரு.

இவ்வளவு கண்டிப்பாய் நீ என்னிடத்தில் பேசலாமா? நான் குருவாச்சுதே, பிரபுவாச்சுதே, கற்றோனாச்சுதே, துரையாச்சுதே என்று எண்ணாதே. நீ பொருத்தனை பண்ணாதவனானால் உன் னிடத்தில் இப்படிப் பேசவேமாட்டேன். வாக்குமாறியை யாரும் கடிந்துகொள்ளலாம். நீ ரோசமுள்ளவனானால் இன்று முதல் உன் பொருத்தனைப்படி நிறைவேற்று. அப்படிச் செய்தால் இந்த மாதிரி உன்னைக் கேட்கமாட்டேன்.

## 11. இவ்வளவுதானா உன் பலம்?

நானுன்னை மகா பலசாலி என்றிருந்தேன். ஆனால் இப்போது பார்த்தபோது பலவீனனென்று கண்டுகொண்டேன். இவ்வளவு தானா உன் பலம்?

நான் அப்படித் தெம்மாடியா? என் பலத்தை நீ என்ன கண்டாய்? சிங்கத்தைக் கிழிப்பேன், கரடியை அடிப்பேன், யானையை வெல்லுவேன், சிலம்பத்தில் மண்டிபோட்டு நூறுபேரை யடிப்பேன். என் பலம் உனக்குச் சொப்பனத்திலும் வராதே என்று சொல்லுகிறாயா?

ஆம். இவ்வளவு வல்லமைகளை எல்லாம் பேசுகிறாயே, பிசாசு என்னும் சிங்கத்தோடு சண்டைபோட்டு வெற்றிகொண் டாயோ? தோற்றுப்போயும் வீரியம் பேசுகிறாயே. நூறு பேரை அடிப்பேன் என்கிறாயே, அவன் ஒருவன்தானே, அவனை ஏன் வெல்லவில்லை? யானையை வெல்லுவேன் என்கிறாயே, அந்தப் பூனையை ஏன் வெல்லவில்லை? ஆம், ஆம் உன் பலத்தைக்

கண்டுவிட்டேன். அவனை வெல்ல என்னால் கூடாது என்று சொல்லேன்.

ஆம். ஐயா! நான் அவனை நினைக்கவில்லை. அவனை வெல்ல என்னாலாகுமா? அவன் கெர்ச்சிக்கிற சிங்கமாச்சுதே. நான் அடிக்கடி அவனோடு சண்டைபோட்டேன். நான் நூறு அடி குதித் தால் அவன் ஆயிரம் அடி குதிக்கிறான். நான் பல்லை நெறித்தால் அவன் உடம்பு முழுவதையும் நெறிக்கிறான். அவனை ஜெயிக்க என்னாலும் கூடாது, உன்னாலும் கூடாது.

## 12. அவன் எம்மாத்திரம்?

முந்தின பகுதியில் அவனை ஜெயிக்க உன்னாலும் என்னாலும் கூடாது என்றாயே. அப்படியா? அவன் எம்மாத்திரம்? நீ சாஸ்திரப் படி அவனோடு சண்டை போடவில்லை. அதினாலே தோற்றுப் போனாய், எல்லாரும் உன்னைப் போலிருப்பார்களோ? நவாபு பட்டாளத்தில் பதினாயிரம் பேரும் இங்கிலிஷ் பட்டாளத்தில் நூறு பேரு மிருந்தால் யார் கெலிப்பார்களென்று நினைக்கிறாய்? இந்த நூறுபேர்தான் கெலிப்பார்கள். ஏனெனில் இவர்களுக்கு சாஸ்திரப் படி சண்டைபோடத் தெரியும்.

அந்தக் கெர்ச்சிக்கிற சிங்கம் உன்மேல் குதிக்கையில் நீ முழங் கால் படியிட்டு, பதுங்கிக்கொண்டு, ஜெபம் என்னும் துப்பாக்கியை யெடுத்து, தேவ வசனம் என்னும் குண்டுகளைப்போட்டு சுடு. அப்போது பெருமூச்சு என்னும் காற்று அதை உதைத்துக்கொண்டு போய் அவன் நெற்றியில்பட அடிக்கும். அப்புறம் அவன் தப்பு வானா பார்ப்போம்.

அவன் உயரமும் பாரியுமாயிருக்கிறானென்று பயப்படாதே. பருத்திப்பொதியை எருது கண்டால் பயப்படும். பின்பு முதுகில் ஏற்றினால் லேசாய்த் தூக்கிப்போம். விசுவாசிக்குப் பேய் ஒரு பருத்திப்பொதிபோல்தான். அவன் பார்வையைப் பார்த்து மயங்

காதே. அவன் உருட்டுப் புரட்டுக்கு அஞ்சாதே. உன்னைக்கொண்டு பயந்து தோற்றுப்போகிறாயேயன்றி அவன் உன்னிலும் பலசாலி யல்ல. அவன் தந்திரனேயன்றி பலவானல்ல. யாரைத்தான் அவன் பலத்தால் மடக்கினான்? ஏவாளையா? தாவீதையா? சிம்சோனையா? சோதோமியரையா? இவர்கள் எல்லாரையும் தடியினா லல்ல தந்திரத்தினால் ஜெயித்தான்.

மேலும் நீ கோட்டையை விட்டு மைதானத்தில் யுத்தம் செய்யக் கூடாது. உன் சேனாதிபதியின்றியும் போகாதே.

## 13. அவனை நம்பாதே

யாரை? அது எவனையென்று கேட்பாயோ? உன் உள்ளூரானைத்தான். அந்த உள்ளூரான் யாரென்று கேட்கிறாயோ? அவன் யாரென்று இதுவரையும் அறியாமல் தான் மோசம் போனாய். அவன் உள் வீட்டுக்காரன் தான். 'அது எந்த உள் வீட்டுக்காரனப்பா? என் அண்ணனா, தம்பியா, மாமனா, மைத்துனனா?' என்கிறாய்.

உள் வீட்டுச் சத்துருவைக் காட்டிக்கொடுக்கிறேனென்று என் பேரில் கோபங்கொள்ளாதே, உன் உள் வீட்டுச் சிநேகிதனாகிய **மாமிசம்** என்பவனிருக்கிறானே, அவனை நம்பாதே. அவன் ஒரு கொடிய பயல். உன்னை நரகத்தின் மத்தியில் கொண்டுவந்து நிறுத்தும்படி சாத்தானிடத்தில் கூலி பேசியிருக்கிறான். உன் ஆத்துமாவைக் கொல்லுமட்டும் தூங்கேன் என்று சபதம் பண்ணியிருக்கிறான். ஆகையால் அவனை நம்பாதே.

அவன் என் வீட்டில் எப்போதுமிருந்து என்னை நேசிக்கிறான், எனக்கு அவன் தீமை செய்யமாட்டான் என்று கனவிலும் எண்ணாதே. காரியமாகுமட்டும் காலைப்பிடிப்பேன், காரியமானபின் குடும்பியைப் பிடித்துக் கீழே போடுவேன் என்று உலகம், பிசாசு என்னும் தன் இரு தோழரிடத்திலும் சொல்லிக்கொண்டிருக்கிறான்.

அவர்களும் அவனைத் தட்டிக்கொடுத்து, சவ்வாசு* என்று அனுப்பி யிருக்கிறார்கள். ஆகையால் அவனை நம்பாதே, உள் சத்துரு இல்லாமல் கோட்டை பிடிபடாதென்று ஒரு பழமொழியுமுண்டு. உனக்கிருக்கும் உட்சத்துரு அவன்தான். உன் நராத்துமபுரி அழிய வேண்டுமானால் அவனால்தான் அழியும், அவனை நம்பாதே.

'அவனை மடக்க நான் என்ன செய்வேன்?' என்று கேட்கி றாயோ? அவனுக்கு இருக்கும் அதிகாரத்தையெல்லாம் வாங்கி அந்த அதிகாரத்தை மனச்சாட்சியென்னும் அஞ்சாநெஞ்சனுக்கு ஒப்புவித்து, அவனை உன் ஆத்துமாவின் ஊழியக்காரனாய் வைத் துக்கொள். அவன் என்ன? மண்தானே அவனை ஏன் மிஞ்சவிடுகி றாய்?

## 14. கண்டேன், போனேன், ஜெயித்தேன்

இப்படி ஒரு சேனாபதி செய்தியனுப்பினான். இதல்லவோ வீரத்தன்மை. இதல்லவோ ஆண்மை.

அநேகர் இவன் மாதிரியைப் பின்பற்றாமல், மெதுவாய் ஜெயிப் பேன் என்று சொல்லுகிறார்கள், ஆறினகஞ்சி பழங்கஞ்சி என்ற பழமொழி தெரியாதா? பசாசு நம்முடைய சத்துரு. அவன் நம்மை ஜெயிக்கப் பார்க்கிறான். அவன் நம்மோடு யுத்தம் செய்து நமது ஆத்துமக்கோட்டையைப் பிடிக்கப் பீரங்கி ஏற்றுகையில் நாம் அதை அறிந்துகொண்டு அவனைத் துரத்தி அடியாமல், நல்லா விடியட் டும், அவனை விடுவேனா? என்கிறோம். விடிந்தால், நல்லது பொழுது சாயட்டும் ஒருகை பார்ப்பேன் என்கிறோம். இப்படிச் சொல்லுகிறதேயன்றி யாதொரு பிரயத்தனமும் செய்கிறதில்லை. இதினாலே பிசாசு நம்மை சீக்கிரம் மேற்கொண்டு மடங்கடிக்கிறான்.

---

* சபாஷ்.

அவன் நம்மைப் பாவத்தில் விழத்தட்ட யோசிக்கிறான் என்று கண்டவுடனே அவனை எதிர்த்தால் மெய்யாய் ஜெயம் நம் முடையது. சற்றுப் பிந்தினால் நிசமாய் ஜெயம் அவனுடையது.

## 15. இரண்டு கத்திகளையும் தீட்டு

நான் விரும்புகிற கத்திகள் இரண்டும் உனக்குண்டா? உண்டா னால் அதை உரையிலிருந்து கழற்றி துருப்பிடியாதபடி தீட்டு. அந்தக் கத்திகளில்லாவிட்டால் கிறிஸ்துவின் கொடியின் கீழடங்கி பாவத்துக்கும், உலகத்துக்கும், பிசாசுக்கும் விரோதமாகத் தைரிய மாய்ப் போர்செய்து, மரணபரியந்தம் கிறிஸ்துவின் உண்மையுள்ள சேவகனும் ஊழியக்காரனுமாயிருக்க உன்னால் கூடாது. அந்தக் கத்திகளெவை? முதலாம் கத்தி **ஜெபம்.** இரண்டாம் கத்தி **உபவா சம்.** ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி வேறெதினாலும் நீங்கள் பிசாசுகளைத் துரத்தக்கூடாது என்று பிசாசை ஜெயித்து தோற்கடித்த இம்மானுவேல் என்பவர் சொன்னார். நீ ஜெபம் என்னும் வாளை ஒரு கையில் பிடித்துக்கொண்டு, உபவாசம் என்னும் வாளை இன்னொரு கையிலும் பிடித்து அட்டகாசம் பண்ணு. பிசாசு உன்கிட்ட வருகிறானா பார்ப்போம். நான் சொல்லி யதை நம்பாவிட்டாலும் ஒரு மாசம் பரீட்சைபண்ணு, ஆணைப்படிக் குச் சொல்லுகிறேன். அவன் கிட்ட வரவேமாட்டான். அவனை ஜெயிக்க இதைவிட சுளுவான வகை மற்றவர்கள் கண்டுபிடிக்கு மட்டும் இதையே கையாடு.

## 16. முள் பார்த்து நட

தென் திருநெல்வேலியில் உடைமரமென்னப்படுகிற ஒரு முள் மரம் மிச்சமாய் உண்டு. ஆகையால் ஜனங்கள் வெளியே புறப்பட்

டால் ஒருவரையொருவர், முள் பார்த்துப் போ, முள் பார்த்து நட என்று சொல்லுவார்கள். எவ்வளவு பத்திரமாய் நடந்தபோதிலும் முள்தைக்கும். ஆகையால் தைத்த உடனே பிடுங்கிக் கொள்ள வேண்டும். பெரும்பாலும் எல்லாரும் முள்வாங்கி என்னும் ஒரு சிறு கருவியை எப்போதும் வைத்துக்கொண்டிருப்பார்கள்.

உன் ஆத்தும நன்மைக்காக நானும் உன்னைப் பார்த்து முள் பார்த்து நடவென்று சொல்லக்கூடாதோ? இவ்வுலகமாகிய காட்டுக் குள் எத்தனையோவிதமான முள் மரங்கள் இருக்கின்றன. துஷ்ட மான கூட்டம், சாராயக்கடை, வேசி வீடு, சிற்றின்பப் பாடல்கள், வீண் சடங்குகள், சகுனங்கள் இவைகள் ஒவ்வொரு முள் மரமென்று நினைத்துக்கொள். ஆகையால் சகோதரனே முள் பார்த்து நட.

இவைகள் ஆத்துமாவில் தைத்து உன்னைச் சேதப்படுத்தும்படி தெருக்களிலும் சந்துகளிலும், பிசாசால் சிந்தப்பட்டிருக்கின்றன. ஆகையால் சகோதரனே முள் பார்த்து நட.

உன் ஆதித் தாயாகிய ஏவாள் இச்சையென்னும் முள் தைத்து இறந்தாள். காயின் பொறாமையென்னும் முள் தைத்து இறந்தான். நேபுகாத்நேச்சார், ஏரோது பெருமை என்னும் முள்ளால் தைக்கப் பட்டிறந்தார்கள், ஆகான் திருட்டு என்னும் முள் தைத்து இறந்தான். அனனியா, சப்பிராள் பொய் என்னும் முள்ளால் தைக்கப்பட்டிறந் தார்கள். பக்தியுள்ள யோபு, தாவீது, மோசே, ஆபிரகாம் முதலிய வர்களும்கூட முள் தைத்து வருத்தப்பட்டார்கள், ஆகையால் சகோத ரனே முள் பார்த்து நட.

உன் ஆத்துமாவில் தைத்திருக்கும் முள்ளைப் பிடுங்க எப்போ தும் ஒரு முள்வாங்கி வேண்டியது. பரிசுத்த ஆவியானவரே அந்த முள்வாங்கி.

# 17. தனி வழி போகாதே

திருடரைப் பற்றிய பயத்தால் இத்தேசத்தில் அநேகர் யாராவது ஒண்டியாய்ப் பிரயாணம் செய்யப்போனால், தம்பி, தனி வழியே போகாதே, பாதை காட்டுப் பாதையாச்சுதே, வழிகள் முள்ளும் முடங்குமாயிருக்கிறதே என்று புத்தி சொல்லுவார்கள், இதையெல் லாம் கவனியாமல் துணிந்து போகிறவர்கள் யாதாமோர் சேதத்துக் குட்படுவார்கள்.

ஒரு கிறிஸ்தவன் தன் ஜீவகாலப் பிரயாணத்தில் தன்னைக் காத்துக்கொள்ளும்படி, ''தனி வழி போகாதே'' என்ற புத்தியைச் சொல்லுவேன். கிறிஸ்தவன் தனிமையாய் இருக்கவும் கூடாது, தனிமையாய் வேலை செய்யவும் கூடாது, தனிமையாய்ப் படுக்க வும் கூடாது, அவனுக்குத் தனி வழியே உதவாது. அவனுக்கு வழித்துணை அவசரம். ஏனென்றால் அவன் சத்துருக்கள் அநேகர். அவனை வழிமடக்க காத்திருக்கிறவர்கள் கோடி.

''மடியில் கனமிருந்தால் வழியில் பயமிருக்கும்'' என்று ஒரு பழமொழியுண்டு. அது சரிதான். இவனுடைய மடியிலே கன முண்டு. கிறிஸ்தவனே! விலைமதிக்கப்படாத ஆத்துமாவை மடியில் வைத்துக்கொண்டிருக்கிறாயே. இதைத் தட்டிப்பறிக்க சாத்தான் வழி யோரங்களிலும், சந்துகளின் முடங்குகளிலும் பதிவிருக்கிறான். ஆகையால் நான் உன்னைப் பார்த்து தனி வழியே போகாதே என்கிறேன். உனக்கு ஒரு துணை ஆள் வேண்டும். அவர் யார்? தேவன். அவரை நீ கூட கூட்டிக்கொண்டு போனால் நீ புத்திசாலி, தாவீது என்பவர் எப்போதும் தேவ துணையோடு தமது ஜீவகாலத் தைக் கழித்தார். அவர் சொன்னதைக் கேள்: 'கர்த்தரை எப்பொழு தும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை'. 'நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், ஏனெனில் தேவரீர் என்னோடிருக்கிறீர்.'

சிநேகிதனே, உன் ஆத்தும பக்தி போகாதிருக்க வேண்டுமா னால் தனி வழி போகாதே.

## 18. பிஞ்சிலே வளை

தலையெல்லாம் நரைத்து, காலெல்லாம் தள்ளாடிப் போன பெரிய மனுஷர், மக்கள் பேரிலே அடிக்கடி பிராது சொல்லுகிறார் கள், இந்த பிராதுக்கு காரணமென்ன? பிஞ்சிலே வளையாததுதான். ஒரு தாய் சிறையிலிருக்கிற தன் மகனுக்காகப் புலம்புகிறாள். அதேன்? பிஞ்சிலே வளையாததினாலே தான். ஒரு உபாத்தியாயர் துஷ்டனாகிய ஒரு மாணாக்கனைக் குறித்து துக்கிக்கிறார். அதேன்? பிஞ்சிலே வளையாததுதான். ஒரு பாவி தன் பாவங்களிலிருந்து விடுதலையடைய பெலனில்லாமல், தவிக்கிறான். அதேன்? பிஞ் சிலே வளையாததுதான். ஆ! சிநேகிதனே நீ அநேகரைப்போல் புத்தியீனனாயிராதே. உன் பிள்ளைகளையும் உன் இச்சைகளையும் பிஞ்சிலே வளை! இரண்டு விரலால் பிடுங்கக்கூடிய ஒரு சிறு முட்செடியைப் பிடுங்காமல் வளர விட்டுப்போட்டு இருபது வரு ஷத்திற்குப் பின்பு போய்ப் பிடுங்கிப்பார். இரண்டு விரல் பற்றுமா? இரண்டு கை பற்றுமா? ஐயோ எத்தனையோ கோடரி மழுங்க வேண்டும். எத்தனையோ கத்திகள் முறியும். எத்தனையோ உளிகள் தெறிக்கவேண்டும். பாவத்தைத் துவக்கத்திலே பிடுங்காவிட்டால் அதின் முடிவு நித்திய மரணமாய் முடியும்.

## 19. ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்?

இந்தக் கேள்வியை கிறிஸ்து தமஸ்குவுக்குப் போகும் வழியில் சவுல் என்பவரிடத்தில் கேட்டார். இன்றைக்குத் தேவன் என்னையும் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்கிறார்: 'ஆண்டவரே! நான் எதினாலே உம்மைத் துன்பப்படுத்துகிறேன்?' என்று கேட்கிறேன். அப்போது அவர் 'மொத்தமாய்ச் சொன்னால் நான் விரும்புகிறதை நீ செய்கிறதில்லை, நான் வெறுக்கிறதை நீ செய்கிறாய். இவ் விதமாய் என்னைத் துன்பப்படுத்துகிறாய்' என்கிறார்.

இது நிசமான வார்த்தை. நான் கடவுள் விரும்புகிறதைச் செய்கிறதில்லை. அவர் வெறுக்கிறதைச் செய்கிறேன். ஆ! கர்த் தாவே என் குற்றத்தைப் பொறுத்து நீர் விரும்புகிறதை நான் விரும்பவும், நீர் வெறுக்கிறதை நான் வெறுக்கவும் கிருபைபுரியும். உம்மைத் துன்பப்படுத்துவது என் பிரியமேயல்ல. இனி துன்பப் படுத்தவேமாட்டேன் என்று ஆணையிடுகிறேன்.

## 20. அப்பாடா துன்பத்தின்மேல் துன்பம்

துன்பம் வரும்போது இப்படி அநேக கிறிஸ்தவர்கள் அடிக்கடி சொல்லுகிறார்கள், சிநேகிதனே, இம்மாதிரி வார்த்தைகளை நீ எப்போதாவது பேசியிருக்கிறாயா? நீ இப்படி பேசுவது சரியல்ல.

தீபம் சுடர்விட்டு எரிய எண்ணெய் வார்க்க வேண்டும். மரம் துளிர்விட்டு வளர தண்ணீர் வார்க்க வேண்டும். அதுபோல் உன் ஆத்துமா துன்பமாகிய தண்ணீர் வார்க்கப்பட்டு, தேவ பக்தியில் வளரவேண்டியது. எந்த எந்தப் பயிரை எப்படி எப்படி வளர்க்க வேண்டுமோ அப்படி அப்படி வளர்க்க வேண்டுமல்லவா? உப்பை ஒரு திராவகத்தில் விட்டால் அதுவும் கவர்* கவராய் வளருகிறது. அப்படியே வெள்ளியை ஒரு திராவகத்தில் விட்டால் அதுவும் முதலில் உருகிப் பின்பு செடிபோல வளருகிறது. அப்படியே உன் ஆத்துமாவை வளர்க்கும் திராவகம் துன்பமே. ஆகையால் துன்பத் தைக் கண்டு கலங்காதே, இகழாதே, அவ்வளவும் உனக்கு நன்மை தான். இனி துன்பம் வந்தால், அப்பாடா துன்பத்தின்மேல் துன்பம் என்று மனச்சோர்புகொள்ளாமல், வா துன்பமே வாவென்று கூப் பிடு, அப்போது தேவன் துன்பத்தையும் இன்பமாக்குவார்.

---

* பிரிந்து பிரிந்து.

# 21. தேன்கூடு

குற்றாலத்து மலையில் தேனருவியென்றொரு இடமுண்டு. அதின் கிட்ட தேன் தட்டு தட்டாயிருக்கும். உயர்ந்த மரங்களிலும் அடர்ந்த செடிகளிலுமிருக்கிறதால் அதை எடுத்துப் புசிப்பது கஷ்டத்திலிருக்கிறது. தேவன், இஸ்ரவேலருக்குக் கொடுத்த தேசத்தில் தேன் ஓடி வடிந்ததால், அது பாலும் தேனும் ஓடுகிற தேசம் என்னப்பட்டது. கிறிஸ்து மார்க்கம் ஒரு மலையென்று சொல்லுவேன். ஆம், அது சீயோன் மலைதான். இதில் ஒரு தேன் தட்டு உண்டு. அந்தத் தேன் தட்டு ஏறக்குறைய நாற்பது தேன் ஈக்களால் கட்டப்பட்டது. அதில் அறுபத்தாறு அடுக்குகளும், 1189 தட்டுகளும் உண்டு. அது கட்டிமுடிய ஆயிரத்து அறுநூற்றுப் பதிமூன்று வருஷங்கள் சென்றன. அப்படியானால் அந்தத் தேன் எவ்வளவு முதல் தரமானதாயிருக்கும்! நீயே சொல், அந்தத் தேன் கூடு எது? **வேதாகமம்** தான். தேவ ஆவியின் ஏவுதலால் அது எழுதப்பட்டபடியால் அவைகள் அனைத்தும் சத்தியம். தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாயுமிருக்கும்படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பிக்கிறதற்கும், பிரயோசனமுள்ளவைகளாயிருக்கின்றன. தேவனுடைய வசனம் தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரம். தேன் அருமை தின்றவனுக்கே தெரியும். தேவ வசனத்தின் அருமை ஜெபத்தோடு அதை விடாமல் வாசித்தவனுக்கே தெரியும். இப்போது உடனே அதில் ஒரு சொட்டுத் தேன் எடுத்துத் தருகிறேன், தின்றுபார்: ''**பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.**''

## 22. எனக்கு அடிக்கரும்பு

கிறிஸ்தவனே நீ ஒரு கரும்புச்செடி. உன் ஜீவகாலத்தின் பற்பல நிலைமைகளே உன்னிலுள்ள கணுக்கள். இப்போது உன்னால் சந்தோஷப்பட சிலர் ஆசிக்கிறார்கள். உலகம், பிசாசு, மாம்சம், இயேசு என்னும் நாலுபேர் எனக்கு உனக்கு என்று வாதாடுகிறார்கள்.

**உலகம்** என்பவன் உன்னைப் பார்த்துச் சொல்லுகிறான்: ''இந்தக் கரும்பு மண்ணிலே உருவாகி, மண்ணிலே வளர்ந்து, மண்ணிலே செழித்து, மண்ணால் போஷிக்கப்பட்டது. ஆகையால் இதின் அடிக்கரும்பு எனக்கு'' என்கிறான்.

**மாமிசம்** என்பவன், அதற்கு இணங்காமல் ''என் இன்பம் என்னும் ஆற்றுத்தண்ணீரை நான் பாய்ச்சி, உல்லாசம் என்னும் உரத்தைப் போட்டு நான் இவனை வெகு பத்திரமாய் வளர்த்தேன். ஆகையால் அடிக்கரும்பு எனக்கு, மற்றதை நீங்கள் என்னமாவது செய்துகொள்ளுங்கள்'' என்கிறான்.

**பிசாசு** என்பவன், ''சகல கரும்புகளையும் நான் குத்தகைக்கு எடுத்துப்போட்டேன். ஆகையால் இந்தக் கரும்பு என்னுடையது. எனக்குத்தான் அடிக்கரும்பு வேண்டியது'' என்கிறான்.

கர்த்தராகிய **இயேசுவும்** உன் ஆத்துமாவாகிய கரும்புக்கு வழக்காடுகிறார். மற்றவனுக்குப் பங்கில்லை என்கிறார். இப்படி உன் ஆத்துமாவை பலரும் கேட்கிறார்களே. இதைப்பற்றி உன் யோசனையென்ன? ஒருவருக்கும் விசனம் வராதபடிக்குச் சரி பங்காக பங்கிடுவேன் என்கிறாயோ? அல்லது சீட்டுப்போட்டு யாருக்கு அடிக்கரும்பு வருகிறதோ அவர்கள் எடுத்துக்கொள்ளட்டும் என்கிறாயோ? இவ்வித இரண்டு காரியங்களுக்கும் கிறிஸ்து சம்மதிக்கவே மாட்டார். அவர் ஒரு பங்கல்ல, முழுப் பங்கையும் கேட்கிறார். அடிக்கரும்பல்ல, முழுக் கரும்பும் கேட்கிறார். நான் உனக்கு புத்தியாகச் சொல்வதைக்கேள். முந்தின மூன்று பேருக்கும்

கொடாதே. அவர்கள் தின்னக் கேட்கிறவர்கள். இயேசுகிறிஸ்துவோ தின்க அல்ல, வளர்க்க கேட்கிறார். ஆகையால் உன் ஆத்துமாவாகிய கரும்பை அவருக்கே கொடு.

## 23. பொத்தலான பை

ஒருவன் பணத்தை பையில் போடுகிறதை வேறொருவன் கண்டால் பையை நன்றாய்ப்பார், பொத்தலிருந்தால் பணமெல்லாம் போய்விடுமென்பான். பொத்தலான பையைப்பற்றி ஆகாய் தீர்க்க தரிசி சொல்லுகிறார் (ஆகாய். 1:6). எல்லா மனுஷரும் தேவனால் தங்களுக்குக் கிடைக்கிற நன்மைகளை மதிக்காமல் பொத்தலான பையிலேதான் போடுகிறார்கள். ஒரு கல்விமான் தன் கல்வியைச் சிற்றின்ப விஷயத்தில் புத்தகம் எழுதி செலவிட்டால் அவன் தன் கல்வியைப் பொத்தலான பையிலேயே போடுகிறான். ஒரு யூகி தன் யூகத்தை இழிவுள்ள காரியங்களில் பிரயோகித்தால் அவன் தன் யூகத்தைப் பொத்தலான பையில் போடுகிறான்.

ஒரு தனவான் தன் பணத்தைக் குடி, டம்பாசாரித்தனம், கூத்து, பெருந்தீனி, வேடிக்கை முதலிய பாவ விஷயங்களில் செலவிட்டால் நிச்சயமாகவே தன் பணத்தைப் பொத்தலான பையில் போடுகிறான்.

பொத்தலான பையில் பணம் போட்டதற்குக் கெட்ட குமாரனே தகுமான திஷ்டாந்தரம். மொத்தமாய்ப் பூமியிலே தங்களுக்காகப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிற எல்லாரும் பொத்தலான பையிலேபணம் போடுகிறார்கள். பரலோகத்தில் தங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவர்களே பொத்தலில்லாத பையில் பணம் போடுகிறவர்கள். அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதுமில்லை. திருடர் கன்னமிட்டு திருடுகிறதுமில்லை. சிநேகிதனே, உன் பையை எடுத்துப்பார். அது பொத்தலான பையா நல்ல பையா?

# 24. ஐந்து மண்டபங்கள்

எருசலேமிலே ஆட்டுவாசலின் அருகே பெதஸ்தாவென்று ஒரு குளமிருந்தது. அதில் ஐந்து மண்டபங்களிருந்தன. அந்த மண்டபங் களுக்குள்ளே குஷ்டரோகிகள், குருடர், சூம்பின உறுப்புடையவர்க ளெல்லாரும் வந்து தங்கியிருப்பார்கள்.

ஏனெனில் சிலகாலத்தில் தேவதூதன் ஒருவன் வந்து அந்தக் குளத்தைக் கலக்குவான்; அப்போது முதலாவது அந்தக் குளத்தில் இறங்குகிறவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் சுக மடைவது வழக்கம். இவ்வித அதிசயம் அவ்விடத்தில் நடந்து சுமார் ஆயிரத்து தொளாயிரம் வருஷங்கள் ஆகிறது. இப்பொழுது அந்தக் குளமிருந்த இடம் தெரியாமலிருக்கிறது. இந்த அற்புதம் நடக்கிறது மில்லை, நோயாளிகள் வருகிறதுமில்லை. ஆனால் அதைவிட ஒரு நல்ல ஊரில் விசேஷமான வேறொரு குளத்தைப்பற்றி நான் ஒரு வர்த்தமானியில்* படித்தேன். அதைப் போய்ப் பார்த்தேன். அதிலும் ஐந்து மண்டபங்கள் இருக்கின்றன. அதிலும் அநேக நோயாளிகள் வந்து தங்கி சுகம் பெறுகிறார்கள். ஆனால் இதில் ஒரு விசேஷமிருக் கிறது. எருசலேமிலிருந்த குளத்தில் முதலாவது விழுந்தவன் தான் சுகமானான். இரண்டாவது மூன்றாவது விழுந்தவன் எல்லாம் ஏமாந்துபோனான். இதிலோ முதலாவது, இரண்டாவது, மூன்றா வது, முப்பதாவது, ஐம்பதாவது, அறுபதாவது, ஆயிரமாவது, லட்சமாவது விழுந்தவனெல்லாம் சுகமாகிறான். விழுகிறதுதான் தாமதம், உடனே சுகமடைகிறான். இது மூன் சொல்லிய குளத்திலும் மேலானதல்லவா? 'அண்ணா! அந்த குளம் எந்த ஊரிலிருக்கிறது? அதற்கு போகும் வழி என்ன?' என்கிறாயா? அந்த ஊர் கிறிஸ்து மார்க்கம்தான். குளம் இயேசுகிறிஸ்துதான். அந்த மண்டபம் அவரு டைய படுகாயந்தான். நான் அதைப்பற்றி அறிந்த தினவர்த்தமானி

---

* பத்திரிகை.

சுவிசேஷம்தான். அதற்குப்போகும் வழி விசுவாசம் தான். நீ சுவிசேஷ மென்னும் பத்திரிகையைப் பிடித்து, விசுவாசமென்னும் ரோட்டாய் நடந்து, கிறிஸ்து மார்க்கமென்னும் ஊரில் சேர்ந்து, கிறிஸ்து என்னும் குளத்தண்டைபோய், அவருடைய ஐந்து காயமென்னும் மண்டபத் திற்குள் அடைக்கலம் புகுந்து, அவருடைய இரத்தத்தில் முழுகு. உன் ஆத்தும வியாதிகள் அதே நிமிஷம் தொலைகிறது பார்.

## 25. அளவில் சின்னவன் ஆணவத்தில் பெரியவன்

இவர் எந்த ஊர் மனுஷன்? இவர் பெயரென்ன, தெரியுமா? இவர் இருக்கும் நகரத்திற்கு உடல் என்று பெயர். இவர் நாமதேயும் ம - ள - ள - **ஸ்ரீ நாவு** என்பவர்தான். இவருடைய குணங்கள் தெரியுமா? பொய்யை மெய்யாக்குவார், மெய்யை பொய்யாக்கு வார், வாழும் குடியை வசமாய்க் கெடுப்பார். இவர் அநேக ராச்சியங்களைக் கீழதுமேலதாக்கிவிட்டார். அநேக வீட்டை தோசை பிராட்டாக்கி விட்டார். அநேகருக்குச் சண்டைகளை எழுப்பி, தலைகளை உடைத்து, கால் கைகளை ஒடித்துவிட்டிருக்கிறார். சிநேகிதனைப் பகையாக்க இவரால் கூடும். உத்தியோகத்தை உதறி விட இவரால் ஆகும். அளவில் சின்னவன்தான். ஆனால் ஆணவத் திலோ சின்னவனல்ல. ஆகையால் தம்பி, இவருக்கு எச்சரிக்கையா யிரும். சின்னப்பயல் தானே என்று நினையாதேயும். ஒரு வயது குழந்தை உமது வீட்டைக் கொளுத்தினால் அது எரியாதோ? கல் வெட்டும் மலைகளைப் போய்ப் பாரும். சிறு உளியால் பிரமாண்ட மலைகளைச் சுக்கல், சுக்கலாய்ப் புரட்டிவிடுகிறான். அவன் அள வில் சின்னப்பயல்தான். ஆணவத்திலோ பெரியவன்.

சிநேகிதனே, நீர்மாத்திரம் நரகத்திற்குப்போய் அங்கிருக்கிறவர் களிடத்தில் ஏதையா இங்கே வந்தீர் என்று கேளும். எனக்குத் தோன்றுகிறபடி முக்கால்வாசிப்பேர் இவனால்தான் ஐயா என்று தம் தம் நாவைக்காட்டுவார்கள். இன்னும் இவருடைய தன்மை இலட்ச

ணங்களை அறிய பரி. யாக்கோபு 3ஆம் அதிகாரத்தை ஒருதரம் வாசித்துப்பாரும். அப்போது தெரியும்.

## 26. என் உபாத்தியாயர்

நான் சிறுவனாயிருக்கையில் ஒரு உபாத்தியாயரிடத்தில் படித்தேன். அவர் குணம் தெரியுமா? குற்றம் செய்தாலும் அடிப்பார், குற்றம் செய்யாவிட்டாலும் அடிப்பார். நான் சற்று புத்தி தெரிந்த பின்பு ஆத்துமாவுக்குப் படிப்பு கொடுக்க வேண்டுமென்று ஒரு உபாத்தியாயரைத் தேடி, ஒரு இரவில் அவர் பாதத்தில் விழுந்து, ஐயா எனக்கு ஞான உபதேசம் ஊட்டவேண்டுமென்று கேட்டேன். 'நல்லதப்பா, நீ போ உனக்குப் பின்னாலே வீட்டிற்கு வருகிறேன்' என்றார். நான் முந்திப்போய் என் வீட்டில் குடிக்கூலிக்கு இருந்தவனிடத்தில் எனக்கு ஒரு உபாத்தியாயர் வருகிறார் என்று சொன்னேன். அதற்கு அவன் 'அடா பயித்தியக்காரா கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு ஊரெங்கும் நெய்யுண்டோ நெய்யென்று அலைகிறவனைப் போலிருக்கிறாயே. என்னைவிட நல்ல உபாத்தி உண்டா? மற்றவன் ஒரு வியாழவட்டம் போதிப்பதை நான் ஒரு நிமிஷத்தில் புகட்டுவேன்' என்றான். 'நீரும் உபாத்தியாயரா? நல்லது, அவர் வந்தால் கதவைச் சாத்திப் பூட்டிக்கொள்ளுகிறேன்: வந்து பார்த்துப் போய்விடுவார். அப்புறம் நான் உம்மிடத்தில் படிக்கிறேன்' என்றேன். நீ மகா புத்திசாலியென்று என் தோளைத் தட்டிக் கொடுத்தான். சற்றுநேரம் பொறுத்து புது உபாத்தியாயர் வந்தார். கதவைத் தாழ்ப்பாள் மேல் தாழ்ப்பாள் போட்டுப் பூட்டிக் கொண்டேன். அவர் வந்து கதவைத் தட்டி, ''இதோ வாசல் படியில் நின்று தட்டுகிறேன். கதவைத் திற அப்பா'' என்றார். நான் திறப்பேனா? நன்றாய்ப் பூட்டி அரவம் காட்டாமல் இருந்துகொண்டேன். சற்றுநேரம் நின்று பார்த்துப் போய்விட்டார். மறுநாளும் வந்தார். மூன்றாம் நாளும் வந்தார். அனுதினமும் வந்தார். நான் அவரைச் சட்டை பண்ணவில்லை. என் வீட்டிலிருந்த உபாத்தியாயரிடத்தி

லேயே படித்தேன். இவனுடைய குணம் தெரியுமா? நன்மைக்கு அடிப்பான். தீமைக்கு அணைப்பான். ஒரு நாள் ஒரு பொய் சொன்னேன். உடனே என் மகனே என்று முத்தம் கொடுத்தான். ஒரு நாள் ஒரு ஜெபம் பண்ணினேன். உடனே தடிக்கம்பெடுத்து அடித்தான். வர வர எனக்கு அவன்மேல் வெறுப்பாகி அவனை வீட்டை விட்டு துரத்தினேன். அவன் போகமாட்டேன் என்றான். அப்புறம் நான் உன்கிட்ட படிக்க வரமாட்டேனென்று இருந்தேன். அவன் பழையபடி வீட்டில்தானிருந்தான். அன்றைக்கும் நான் போய்க் கூப்பிட்ட உபாத்தியாயர் வந்தார். பழைய உபாத்திக்கு வெட்கம் வரும்படி உடனே கதவைத் திறந்து மன்னிப்புக் கேட்டேன். அவர் என் குற்றத்தைப் பொறுத்து, எனக்கு ஞானோபதேசம் சொல்லி, என் இருதயமாகிய வீட்டை விட்டுப் போகமாட்டேனென்று பிடிவாதம் பண்ணின பழைய உபாத்தியாகிய சாத்தானைத் துரத்தி, எனக்கு நல்ல படிப்புகளையெல்லாம் படிப்பித்தார். அவர் நல்ல உபாத்தியாயர், தேறின உபாத்தியாயர். ஆனால் சம்பளம் வாங்கமாட்டார். அவருடைய குணமென்ன தெரியுமா? தீமைக்கு அடிப்பார். நன்மைக்கு அணைப்பார். நீயும் அவரிடத்தில் போய் படி. அவர் யார் தெரியுமா? பரிசுத்தாவி.

## 27. உன் கணக்கப்பிள்ளை

உன் கணக்கப்பிள்ளையை ஊரிலே காணோமே; என்ன விசேஷம்? என்று கேட்டேன். அதற்கு அவன் எனக்கும் என் கணக்கப் பிள்ளைக்கும் மனஸ்தாபம் நேரிட்டது. என் இஷ்டப்படி அவன் நடக்கிறதில்லை. என்னை எதிர்த்துப் பேசுகிறான். ஆகையால் வேலை செய்யாமல் வீட்டோடு இருக்கிறான் என்று சொன்னான். இந்த கணக்கப்பிள்ளை பேர் தெரியுமா? ம - ள - ள - ஸ்ரீ **''மனச்சாட்சி''** என்பவர்தான். இவர் எப்படிப்பட்டவர் தெரியுமா? அஞ்சாநெஞ்சன். இவர் உனக்குப் பயப்படுவாரா? பயப்படவே மாட்டார். ஏனென்றால் அவர் உன்னாலல்ல, உன்னைப் படைத்த

தேவனால் உத்தியோகத்தில் நியமிக்கப்பட்டவர். மேலும் உன் குறைவுகளையும் பலவீனங்களையும் நன்றாய் அறிந்தவர். உனக்குப் பயப்படமாட்டார். மேலும் அவர் யதார்த்தன். யதார்த்தவாதி வெகுஜன விரோதியானாலும் அதற்கும் அஞ்சார். மேலும் நீ அவரை கோபிக்கிறதெல்லாம் உனக்குத்தானே நஷ்டம். உன் ஆத்துமாவுக்குத்தானே கேடு. நீ அவரை மடக்கினால் உன் சத்துருவுக்கு இடம் கொடுக்கிறாய். அது தெரிந்துதான் நான் என் மனதின் சர்வ அதிகாரத்தையும் அவருக்கே ஒப்புவித்துப் போட்டேன். அவர் செய்யச் சொன்னபடி செய்கிறேன். அவர் விலக்குகிறதைச் செய்யாமல் விடுகிறேன். அவருக்கு ஒரே ஒரு குணமுண்டு, தீமையை மாத்திரம் தடுப்பார். அது நல்லதுதானே. அவர் நன்மையைத் தடுத்தால் கோபிப்பது நியாயம். சீ, சீ, அவரோடு மனஸ்தாபம் வேண்டாம். அவரை வீட்டிலிருந்து கூப்பிட்டு தமது வேலையைப் பார்க்கச் சொல்லு. அப்போதுதான் உன் ஆத்தும நன்மை விருத்தி பெறும்.

## 28. அஸ்திபாரம் பலமில்லை

ஒரு மனுஷன் காற்றுமழையும் அடித்ததால் விழுந்து கிடந்த தன் வீட்டின்முன் உட்கார்ந்து கண்ணீர்விட்டு, ஐயோ! 1000-ரூபாய் போட்டேனே, ஆறு மாதம் கஷ்டப்பட்டேனே எனக்கு இந்த கெதியா வந்தது என்று புலம்பினான். அவன் கிட்டப்போய் ஆயிரம் போட்டென்ன? ஆறு மாசம் கட்டியென்ன? அஸ்திபாரம் பலமில்லை, அதனால் விழுந்தது என்று சொன்னேன். உடனே அவன் மண்வெட்டியால் தோண்டிப் பார்த்து நான் சொன்னது சரியென்று கண்டு, அடடா! அஸ்திபாரம் பலமாய்ப் போட்டேனில்லையே! அடடா அஸ்திபாரம் பலமாய் போட்டேனில்லையே என்று தன்னை நொந்து கொண்டிருந்தான். சிநேகிதனே! நீயும் மறுமைக்குரிய நம்பிக்கையென்னும் உன் வீட்டைக் கட்டுகிறாயல்லவா? அஸ்திபாரத்தைப்பார். கட்டடம் அழகாயிருக்கிறதென்று யோசித்து ஏன்

வீணாய் உயர்த்திக்கொண்டு போகிறாய். கட்டிடம் உயர உயர அதிக காற்றை தாங்கவேண்டுமேயென்று சொன்னேன். அதற்கு அவன் 100 — அடி மணல் தோண்டி ஆழமாய் அஸ்திபாரம் போட்டேன், விழாது என்று சொன்னான். இப்படி சொல்லிக்கொண்டிருக்கவே ''வறுமை'' என்னும் கார்மேகம் வந்து கவிந்து, ''துன்பம்'' என்னும் இடிகள் இடித்து, ''உபத்திரவம்'' என்னும் அலைகள் மோதின. ஐயோ! அவன் கட்டின ''நம்பிக்கை'' என்னும் வீடு இடிந்து விழுந்தது. சிநேகிதனே நீ கட்டும் வீடும், அப்படியே விழுந்து போகாதபடி தயவுசெய்து அஸ்திபாரத்தைப்பார். உன் அஸ்திபாரம் மணலின் மேலல்ல, கன்மலையின்மேல் இருக்கிறதா பார், உடனே பார்.

## 29. நாளைக்காகட்டும்

நாளையத்தினம் என்னுடையதுமல்ல, உன்னுடையதுமல்லவே, பின்னை ஏன் நாளைக்கு ஆகட்டும் என்கிறாய்? இதற்குமுன் செத்தவர்களில் கோடானு கோடிபேர் நாளைக்கு ஆகட்டும், நாளைக்கு ஆகட்டும் என்று சொல்லியே நரகம் போய் சேர்ந்தாயிற்று. இது நிசம். நாளைக்கு ஆகட்டும் என்று சொல்லுகிறதும், மாட்டேன் என்று சொல்லுகிறதும் ஒன்றுதான். நாளைக்கு ஆகட்டும் என்று சொல்லுகிறது உன் மனவெறுப்பைச் சற்று மரியாதையாயும், மாட்டேன் என்று சொல்வது நேராயும் வெளிப்படுத்துகிறதேயன்றி வேறென்ன வித்தியாசமிருக்கிறது? நாளைக்கு ஆகட்டும் என்கிற வார்த்தையை வழங்க உனக்குப் பிரியமிருக்குமானால் நான் உனக்குச் சொல்லிக்கொடுக்கிறபடி வழங்கு. அதாவது ஜெபம் பண்ணு என்று உன் மனமாவது வேறேயாராவது சொன்னால் நாளைக்கு ஆகட்டும் என்று சொல்லாதே. வேதம் வாசி என்று சொன்னால் நாளைக்கு ஆகட்டும் என்று சொல்லாதே. கோவிலுக்குப் போவென்று சொன்னால் நாளைக்கு ஆகட்டும் என்று சொல்லாதே. பொதுவாக நன்மையான எந்தக் காரியங்களைச் செய்ய வேண்டியதிருந்தாலும் நாளைக்கு ஆகட்டும் என்று சொல்லாதே.

ஆனால் சூதாடக் கூப்பிட்டால் நாளைக்கு ஆகட்டும் என்று சொல். கள்ளச் சாட்சிக்குக் கூப்பிட்டால் நாளைக்கு ஆகட்டும் என்று சொல். கள்ளுக்கடைக்குக் கூப்பிட்டால் நாளைக்கு ஆகட்டும் என்று சொல். பொதுவான எந்தத் தீமையான காரியங்களைச் செய்யவேண்டியது நேரிட்டாலும் நாளைக்கு ஆகட்டும் என்று சொல். இதின்படி நடப்பேனென்று வாக்குக் கொடு.

## 30. இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன?

இப்படி ஒரு நியாயசாஸ்திரி கிறிஸ்துவை மடக்கிக் கேட்டான். நீயும் அப்படியே உன்னைக் குறித்து சிலவேளை கேட்கிறாய். என் அழகில் குறைவா? என் ஆபரணத்தில் குறைவா? அங்கத்தில் குறைவா? பணத்தில் குறைவா? படிப்பில் குறைவா? பலத்தில் குறைவா? என்று கேட்கிறாய். இவைகளிலெல்லாம் உனக்குக் குறைவில்லாவிட்டாலும் உன் ஆத்தும விஷயங்களில் குறைவில் லையா? என்று கேட்டால் அதற்கும் நீ நான் வேதம் வாசிக்கவில் லையா? ஜெபம் பண்ணவில்லையா? கோவிலுக்குப் போகவில் லையா? இராப்போசனம் சேரவில்லையா? பின்னை என்னிடத்தில் என்ன குறைவு என்று மடக்குகிறாய். ஆ! பெருமையுள்ள நாவே உன் விசுவாசம் ஏன் குறைவாயிருக்கிறது? இரட்சகர் பேரிலும் உன் பிறர் பேரிலுமுள்ள அன்பு ஏன் குறைவாயிருக்கிறது? உன் தேவ பக்தி ஏன் குறைவாயிருக்கிறது? இதற்கு உத்தரவு சொல். வாயுள்ள வனுக்குக் காணியென்ற பழமொழிப்படி ஏன் உன் வாய்ச்சாலத்தால் குறைவுகளையெல்லாம் மூடுகிறாய்? என்னிடத்தில் தான் மூடுகி றாய். தேவனிடத்தில் மூடுவாயோ? உன் விசுவாசப்பெட்டியைத் திறந்துபார், கடுகு அளவு விசுவாசம் கூட இல்லையே, உன் அன்பின் பொக்கிஷத்தைப்பார். ஒரு விரல் கூட இல்லை. உன் பக்தியின் பொக்கிஷத்தைப்பார். வெறுமையாய் இருக்கிறது. உடனே போய் ஆண்டவரே என் விசுவாசத்தைப் பெருகச்செய்யும், அன்பை வர்த்திக்கப்பண்ணும், பக்தியை வளரச்செய்யும் என்று ஜெபி, வீண் பெருமை கொண்டு கெட்டுப்போகாதே.

## 31. நான் இந்தத் தேசத்தானல்ல

ஒருவன் தன் அயல் வீட்டுக்காரனிடத்தில் தன் வெள்ளியுடைமைகளையும், பொன்னுடைமைகளையும், பட்டுகளையும், பணமுடிப்பையும் கொடுத்து, அண்ணா! இதைத் தயவாய் உமது வசத்தில் வைத்து வைக்கிறேன், உமது இஷ்டப்படி நீர் அதை உபயோகித்து, நான் எப்போ வருவேனோ அப்போதெல்லாம் ஒரு கும்பிடு மாத்திரம் போடும் என்று கேட்டானாம். அதற்கு அவன் ஐயா உம்முடைய பொருளும் வேண்டியதில்லை, நம்முடைய கும்பிடும் வேண்டியதில்லை. ஏனென்றால் நான் இந்தத் தேசத்தானல்ல, நான் சீக்கிரம் என் சொந்த தேசத்திற்குப்போவேன். ஆகையால் உம்முடைய பொருள் உம்மோடும் என் கும்பிடு என்னோடும் இருக்கட்டும் என்றானாம். நல்ல கெட்டிக்காரன்.

பிசாசும் அடிக்கடி என்னிடத்தில் வந்து சிற்றின்பமென்னும் காஷ்மீர சால்வையையும், பெருமை என்னும் சரப்பணியையும், மாம்சமென்னும் மணியையும், உலகமென்னும் கல்பதித்த நகையையும், இச்சையென்னும் உயர்ந்த விலையுள்ள மதுபானத்தையும், வண்டி வண்டியாய் என் ஆத்துமாவின் பிரதான வாசலண்டை நிறுத்தி, கதவைத் தட்டி கூப்பிட்டு, இவைகளெல்லாவற்றையும் உனக்குத் தத்தம் பண்ணுகிறேன். நீ நாடோறும் அந்தி சந்தி மத்தியானத்தில் எனக்குக் கும்பிடுபோடு என்று சொல்லுகிறது. அதற்கு நான் அப்பா, நான் இந்தத் தேசத்தானல்ல. எனக்கு இவை வேண்டாம். நான் அயல்தேசம் சீக்கிரம் போவேன் என்கிறேன். மறுபடியும் அது போகிறதா. நாடியைத் தாங்கி நயந்து இதைவிட்டு போகுமட்டுமாவது வைத்துக்கொண்டு மூன்று தரம் கும்பிடு போடேன் என்கிறது. அதற்கும் நான் இணங்காமல் சுமக்கும் நாளொன்றுக்கு மூன்று கும்பிடா? போம் போம், நான் ஒரு கும்பிடாவது தரமாட்டேன் என்கிறேன். பின்னும் அது தொலைகிறதா? எட்டு நாளைக்கு ஒன்றாவது போடுமேன் என்கிறது. அப்போது நான் உம்முடைய பொருளும் வேண்டாம், நம்முடைய கும்பிடும் வேண்டாம், போம் போம் என்று சற்று கடிந்து சொல்லுகிறேன். அது

பின்னும் போகிறதா? போனதெல்லாம் போகட்டும், வருஷத்திற்கு ஒரு தடவையாவது ஒரு கும்பிடு போடும். இவ்வளவையும் எடுத்துக்கொள்ளும் என்று சொன்னது. நானும் மெய்மறந்து வருஷத்திற்கு ஒரு முறைதானேயென்று வாங்கிக்கொண்டு, முதல் வருஷம் ஒரு கும்பிடு போட்டேன். இரண்டாம் வருஷம் இரண்டு போடப்பண்ணிவிட்டான். மூன்றாம் வருஷம் நாலு போடப்பண்ணினான். இப்படி ஏழு வருஷங்களுக்குள்ளாக ஒரு தினத்துக்கு மூன்று கும்பிடல்லவா கேட்டான். பின்பு நானே வலிய முப்பது கும்பிடு நாழிகைக்கொன்றாகப் போட்டேன். பின்னும் சில வருஷங்களுக்குள்ளாக நிமிஷத்துக்கொன்று போட பண்ணிப்போட்டானப்பா. அவன் அடிமைத்தனத்திலிருந்து நான் தப்பினபாடு கடும்பாடு. கிறிஸ்தவனே, பிசாசும், பாவமும் உன்னை இப்படி மேற்கொள்ளுகிறது. எச்சரிக்கையாயிரு.

## 32. மினுங்குகிறதெல்லாம் பொன்னல்ல

நான் ரோட்டில் நடந்துபோகையில் பள பளவென்று மினுமினுப்பான ஒரு சங்கிலியைக் கண்டெடுத்து தட்டானிடத்தில் போய் ரகசியத்தை வெளியிடாமல் மதிப்பு பார்த்தேன். அவனும் அதன் மினு மினுப்பைப் பார்த்து மயங்கி, இது நல்ல தங்கம், பசும்பொன், உயர்ந்த மாத்திருக்கும் என்று சொல்லிக்கொண்டு மெதுவாய் பையைத் திறந்து உதட்டைப் பிதுக்கிக்கொண்டு, உரை கல்லையெடுத்து அந்தச் சங்கிலியை உரைத்து மினுங்குகிறதெல்லாம் பொன்னல்ல என்றான். என்ன அப்படிச் சொல்லுகிறாய்? ஆறு மாற்றா ஏழுமாற்றா என்றேன். அவனோ இது பித்தளை, பித்தளை என்று சொல்லி தரையில் எறிந்துவிட்டான். மினுக்குள்ளதை பொன்னென்று நினைத்தவன் உரைத்துப் பார்த்து பொன்னல்ல என்று கண்டு கொண்டான்.

நானும் இப்படி மனுஷரை மதிக்கிறேன். சிலர் கல்வியால் மினுங்குகிறார்கள். சிலர் பலத்தில் பகட்டாய்த் தோன்றுகிறார்கள்.

சிலர் பணத்தில் பளபளக்கிறார்கள். சிலர் வாய்ச் சாதுரியத்தினால் மயக்குகிறார்கள். இதெல்லாவற்றையும் பார்த்து மயங்க மாட்டேன். மினுங்குகிறதெல்லாம் பொன்னல்ல. நான் மனுஷரை உரைத்துப் பார்க்குமட்டும் நம்பேன். எவனைப்பற்றிக் கேட்டாலும் அவனை கிறிஸ்து என்னும் உரைகல்லில் உரைத்துப் பார்த்து அவனை மதிப்பேன். சிநேகிதனே! கிறிஸ்து என்னும் உரைகல்லில் உரைத்துப் பார்த்தால் உன் மாற்றுத் தெரியும். இதினாலே யார் மாயக்காரனென் றும், யார் தேவனுடைய உத்தம பிள்ளையென்றும் தெரியவரும். சாத்தானும் ஒளியை வேஷம் பூண்டு வருவான். அந்த ஒளி நேர் ஒளியோ மாற்று ஒளியோவென்று கவனிக்குமுன் அவனைச் சேர்க் காதே.

## 33. நானே வழி

மனுஷனே நீ மோட்ச பட்டணத்திற்குப் போகும் ஒரு பிரயாணி யல்லவா! உன் பிரயாணத்தைப் பற்றி நீ அறிந்து கொள்ளவேண்டிய விசேஷித்த ஒரு விஷயமுண்டு. அதாவது நீ மோட்சத்துக்குப் போகும் பெரும் பாதையில் சற்றுநேரம் நடந்தால் இரண்டு கவர்கள்* பிரியும். ஒன்று விசாலமானதாயும், கல்கரடு இல்லாமல் ஒத்தளமாயுமிருக்கும். அநேகர் அதின் வழியாய் நடப்பார்கள். இன்னொன்று, சீறும் மாறும் நெருக்கமும் இடுக்கமுமான வழியா யிருக்கும். முள் அதிகமாயுண்டு. கல் அடிக்கடி உன்னை இடறவைக் கும். இந்த இரண்டில் நீ என்னத்தைத் தெரிந்துகொள்வாய்? இந்த இரண்டில் துவக்கத்தில் இரண்டுபேர் நிற்கிறார்கள். உன்னைக் கண்டவுடன் ஒவ்வொருவரும் உன்னைக் கூப்பிட்டு நானே வழி, நானே வழி, என் பிறகே வா என்பார்கள். அவ்விருவரில் ஒருவ ருக்கு இயேசு என்றும், இன்னொருவனுக்கு பிசாசு என்றும் பேர். இயேசு நிற்கும் பாதைக்கு ஜீவனுக்குக் கொண்டுபோகும் பாதை யென்றும், பிசாசு நிற்கும் பாதைக்கு கேட்டுக்குப் போகும் பாதை யென்றும் பேர்சொல்லப்படும். இவ்விரு கிளைகளும் பிரியும்

* பிரிவுகள்.

சங்கத்திலிருந்து பார்த்தால் ஜீவனுக்குக் கொண்டுபோகும் வழியென்பது கேட்டுக்குக் கொண்டுபோகிற வழிபோலும், கேட்டுக்குக் கொண்டுபோகும் வழி ஜீவனுக்குக் கொண்டுபோகும் வழிபோலும் உன் கண்ணுக்குத் தோன்றும், உன் மனதின்படி வழியைத் தெரிந்து கொள்ளாதே. தங்களுடைய கண்ணுக்கு நன்றும், காலுக்குச் சுளுவுமாயிருக்கிறதென்று பெரும் பாதையில் நடந்த கோடா கோடிப்பேர் இப்போது நரகத்தின் நடுவிலிருந்து ஓலமிடுகிறதைக் கிறிஸ்துவின் மார்க்கமாகிய உயர்ந்த மலைமேலிருந்து எட்டிப்பார்த்தால் கண்டு கொள்வாய். இடுக்கமான வழியைப் பிடித்து நடந்தவர்கள் இப்போது மோட்சத்தில் தேவசிம்மாசனத்திலிருந்து ஆனந்தம் பாடுகிறதை நீ கண்டிருப்பாய் அல்லது கேட்டிருப்பாய். கேட்டுக்குக் கொண்டுபோகும் பாதை விரிவாயும், வழி விசாலமாயும் இருக்கிறது. அநேகர் இதில் பிரவேசிக்கிறார்கள். ஜீவனுக்குக் கொண்டு போகும் பாதை இடுக்கமாயும், வழி நெருக்கமாயுமிருக்கிறது. சிலர் மாத்திரம் அதில் பிரவேசிக்கிறார்கள் என்று ஒருதரம் தேவகுமாரன் முறையிட்டிருக்கிறார். ஆகையினால் சிநேகிதனே!

அநேகர் போகிறார்களே,
அரசரும் வீரரும் போகிறார்களே,
வருத்தமில்லாத வழியாயிற்றே,
சாலையும் நிழலுமுள்ள வழியாயிற்றே.

என்று அதைப் பிடித்து நடவாதே. அடுத்த வழியில் நட. இன்னும் இதைவிடச் சுளுவான ஒரு உபாயம் சொல்லுகிறேன். இரு கிளை வழிகளண்டை நிற்கிற இரண்டு பேரையும் பார்த்து உம்முடைய பெயரென்ன? உம்முடைய பெயரென்ன என்று கேள். அதில் யாருடைய வாயிலிருந்து நானே இயேசு என்கிற வார்த்தைகள் வருமோ அவர் பிறகாலே ஆட்டுக்குட்டிபோல் போ. என்ன இடுக்கம் வந்தாலும் கொஞ்சதூரம் நடந்து போ. அப்புறம் மெய்யாய் மோட்சம் சேருவாய், மெய்யாய்ச் சொன்னேன். இது நிசம். நான் சொன்ன பேச்சைத் தட்டி அடுத்த வழியாய்ப் போனாயானால் மெய்யாய், மெய்யாய், மெய்யாய்ச் சொன்னேன், நரகம், நரகம், நரகம்.

## 34. ஒருமனம் வெகுபலம்

ஏதாவது ஒரு குறியைவைத்து அம்பு எறிகிறவனும், துப்பாக்கி சுடுகிறவனும் ஏன் நோக்கும்போது ஒரு கண்ணைமூடி ஒரு கண்ணால் குறிபார்க்கிறான் தெரியுமோ? இரண்டு கண்ணையும் திறந்து குறிபார்த்தால் குறி தப்பிப்போகும், வேட்டை விழாது. அதுபோல் ஒன்றை நினைக்கிறவன் அந்த ஒன்றிலேயே தன் மனதை சிதறவிடாமல் செலுத்தினால் அவன் காரியம் வாய்க்கும்.

கிறிஸ்தவனே ஜெபம் பண்ணும்போது ஒரேமனம் உனக்கு அவசரம். ஏனென்றால் ஜெபத்தில் நீ தேவனோடு போராடுகிறாயல்லவா. தேவனோடு போராடி, வெற்றி உன்னுடையதாக வேண்டுமானால் அதற்கு எவ்வளவு பலம் தேவை. இவ்விஷயத்தில் நான் யாக்கோபையும் எலியாவையும் மெச்சுகிறேன்.

ஜெபம் உனக்கு ஆகவேண்டிய காரியங்களைத் தேவசமுகத்திற்கு எழுதியனுப்பும் ஒரு மனு. சிதறின மனதோடு பண்ணும் ஜெபம் தேவனிடத்தில் அனுப்பும் மனுவில் மையும், கிறுக்கும், எழுத்துப்பிழையும் போட்டு சங்கதி இன்னதென்று கண்டுபிடியாதபடி செய்யும் ஒரு மனுபோல் இருக்கிறது. மேலும் அதில் நீ கேட்கும் காரியம் அவ்வளவு விசேஷித்ததும் அவசியமாய் வேண்டியதுமல்ல என்பதுபோல் காட்டுகிறது.

ஒரே மனதோடு ஸ்தோத்திரம் செலுத்தி ஜெபம் செய்தால் நன்றியறிதலாக நான் என் சகாயருக்குப் பொன்தட்டில் வைத்துச் சலாம் பண்ணும் மாதுளம் பழங்களைப்போல் இருக்கிறது. பல மனதோடு நான் செலுத்திய ஸ்தோத்திரம் பொன்தட்டிலே நல்ல பழங்களையும் அழுகின பழங்களையும் ஒன்றாய் வைத்து அவரை சலாம்பண்ணியது போல் இருக்கிறது. அப்படிப்பட்ட வெகுமானம் அங்கீகரிக்கப்படுமா? இவ்விரண்டிலும் நான் ஒருமையாயிருந்தால் வெகு பலமும், பலனுமாயிருக்கும்.

---

## எங்களின் அண்மைக்காலத் தியான நூல்கள்

**ஏழு வார்த்தைகள்**
**கிறிஸ்தவ ஜீவியம்**
**கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்**
**என் சுயசரிதை**
**நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர்**
**பரமானந்தம் ஐயரின் தியானக் குறிப்புக்கள்**
— எஸ். பரமானந்தம்

**நிமிடச் செய்திகள்**
— தி. தயானந்தன் பிரான்சிஸ்

**கண்ணீரைப் போக்கும் காலைப்பொழுது**
— ஜான் எச்.பீட், தமிழாக்கம் : தி. தயானந்தன் பிரான்சிஸ்

**உயர, உயர....**
**ஆண்டவரே சொல்லும் அடியேன் கேட்கிறேன்**
— கே.ஜி. எபநேசர்

**எல்லாம் இயேசுவே**
— எபநேசர் டிக்கிகஸ்

**சிறுவர்களே உங்களுக்கு**
— ராஜம்மாள் டிக்கிகஸ்

**யாமறிந்த நூல்களிலே...**
— தி. தயானந்தன் பிரான்சிஸ்

**மோட்சப் பிரயாணம்**
— ஜான் பனியன், தமிழாக்கம் : சாமுவேல் பவுல்

**தியான ஆலயம்**
**கர்த்தருடைய ஜெபம்**
**உங்களோடு ஒரு நிமிடம்**
**ஆத்தும நேசரின் அங்கமகத்துவம்**
**தியானச் சோலை**
— சாமுவேல் பவுல்

CLS

**PUTHIA ĒRPAṬṬUP PURUṢHAR**
BY SAMUEL PAUL
**விலை ரூ. 90.00 (இந்தியாவில் மட்டும்)**